# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 மாசி 12 வியாழக்கிழமை (24-02-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:77


# பயணிகள் கப்பல் சேவை 6ஆம் திகதி ஆரம்பமாகும்

## ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடந்த கூட்டத்தில் அறிவிப்பு

கொழும்பு, பெப்ரவரி 24

**திருகோணமலைக்கும் - காங்கேசன்துறைக்கும் இடையில் பயணிகளுக்கான நிரந்தரக் கப்பல் சேவையை இலங்கைக் கப்பல் கூட்டுத்தாபனம் எதிர்வரும் ஆறாம் திகதி ஆரம்பிக்கும்.**

**இந்த விவரம் தொடர்பாக நேற்று கொழும்பில் ஜனாதிபதி செயலகத்தில் நடந்த உயர்மட்ட மாநாட்டில் இது பற்றிய அறிவிப்பு விடுக்கப்பட்டது.**

கப்பல் கூட்டுத்தாபனம் இச்சேவைக்காக சிங்கப்பூரில் புதிதாகக் கட்டியுள்ள 'லங்காராணி' கப்பலே (Ferry) விரைவில் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டு இச்சேவையில் ஈடுபடுத்தப்படவிருப்பதாகவும்- அங்கு தெரிவிக்கப்பட்டது.

வாரத்தில் மூன்று நாள்கள் காங்கேசனில் இருந்தும் மற்றைய மூன்று நாள்கள் திருகோணமலையில் இருந்தும் இச்சேவை நடைபெறும்.

யாழ்ப்பாணத்தில் யாழ்.செயலகமும், திருகோணமலையில் பட்டணமும் சூழலும் பிரதேச செயலகமும் இந்தப் பயணிகள் சேவைக்கான டிக்கெட் விநியோகம் மற்றும் ஏற்பாடுகளைக் கவனிக்கும்.

ஒவ்வொரு பயணியும் ஆகக்கூடியது முப்பது கிலோ பொருள்களை தன்னுடன் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவார். எனினும் திருமலையில் இருந்து தமது சொந்த இடங்களுக்குத் திரும்பும் அகதிகள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அரசு - புலிகள் பேச்சு வெற்றி பெறும் அறிகுறி!

## தென்படுகின்றன என்கிறார் அமைச்சர் பீரிஸ்

கொழும்பு, பெப்.24

"அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நோர்வேயின் ஏற்பாட்டில் இடம் பெறவிருக்கும் பேச்சுக்கள் வெற்றி பெறுவதற்கான அடையாளங்கள் தென்படுகின்றன" என்று நீதி அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

வெளிநாட்டுச் செய்தியாளர் சங்கத்தின் உறுப்பினர் மத்தியில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது :-

இந்தப் பேச்சுக்களில் சமாதானத் திசையில் கணிசமான முன்னேற்றம் ஏற்படும் என நம்புகிறோம்.

இந்த விடயத்தில் ஊக்கமளிக்கக் கூடிய அடையாளங்கள் தற்சமயம் தென்படுகின்றன.

இருளுக்குப் பின்னர் ஒளி தென்படுகின்றது. ஆனால் அது பறவைகைக்கு வந்துவிட்டதென்று அர்த்தமாகாது.

நடைமுறைப்படுத்தக்கூடிய அரசமைப்புத் திருத்தங்கள் இப்போதுள்ளது.

பேச்சு நடத்தக் கூடிய நிலைக்கு வருவதென விடுதலைப்புலிகள் இயக்கம் முடிவு செய்துள்ளது.

இது பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு அவர்கள் தயாராக உள்ளனர் என்பதைக் காட்டுகின்றது. அவர்கள் பேச்சுக்கான கதவுகளை மூடிவிடவில்லை.

இந்தப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு பதிலாக இருக்க முடி

(12 ஆம் பக்கம் பார்க்க)

# உயிரிழக்கும் புலிகளின் சடலங்கள் குடாக்கடல் வழியாக அனுப்பப்படும்

## இணக்கம் காணப்பட்டதாக செஞ்சிலுவையினர் தகவல்

யாழ்ப்பாணம்,பெப்.24

குடாநாட்டில் இடம்பெறும் மோதல்களில் உயிரிழக்கும் தமது போராளிகளின் சடலங்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகள் மூலம் பொறுப்பேற்க விடுதலைப் புலிகள் கொள்கை அளவில் இணக்கம் தெரிவித்துள்ளதாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ். வதிவிடப்பிரதிநிதி பியர் பேர்ணாண்ட் தெரிவித்தார்.

யாழ். கடலேரி ஊடாக இந்தச் சடலங்களை எடுத்துச் சென்று விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கவும் இணக்கம் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

1995ஆம் ஆண்டு குடாநாடு படையினரின் கட்டுப்பாட்டில் வந்த பின்னர் இடம்பெற்ற மோதல்களில் உயிரிழந்த விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களின் சடலங்களை படையினரின் வேண்டுகோள்படி விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது என்றும் -

இணக்கநிலை ஏற்படாததையடுத்து அந்தப் பணியை செய்ய முடியாத நிலை நிலவியதாகவும் - அவர் மேலும் தெரிவித்தார்.

தற்சமயம் விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற பேச்சுக்களில் தமது உறுப்பினர்களின் சடலங்களை பொறுப்பேற்க அவர்கள் கொள்கை அளவில் இணங்கியுள்ளனர் என்றும் -

உயிரிழந்தவரின் விவரங்கள் விடுதலைப் புலிகளுக்கு தெரிவிக்கப்பட்டு அவர்கள் இணங்கிய பின்பே சடலம் அனுப்பப்படும் என்றும்- அவர் மேலும் தெரிவித்தார்.

குருநகர் இறங்குதுறையில் வைத்து படையினரிடம் சடலத்தைப் பொறுப்பேற்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கொடியுடனான வள்ளத்தில் எடுத்துச்சென்று கல்முனை இறங்குதுறையில் வைத்து புலிகளிடம் அவற்றை ஒப்படைக்க இணக்கம் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் சொன்னார்.

(உ-3)

### 'லங்காமுடித்த' பயணிகள் சேவை

'லங்காமுடித்த' கப்பல் எதிர்வரும் ஞாயிறன்று காங்கேசன் துறையிலிருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு திருகோண மலைக்குச் செல்லவிருக்கின்றது.

இதில் பயணம் செய்ய விரும்புவோர் நாளை நண்பகல் 12 மணிக்குப் பின்னர் டிக்கெட் பெறுவதற்காக சமுகம் தரும்படி யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்துள்ளது.

### கிரனேட் வீச்சு

கண்டி வீதியில் - சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு அருகில் சென்று கொண்டிருந்த இராணுவ டிரக் மீது நேற்றுக் காலை 10.30 மணியளவில் கிரனேட் வீசப்பட்டது. எனினும் வாகனம் சேதமின்றித் தப்பியது.

பின்னர் நடத்தப்பட்ட தேடுதலின் போது சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் மெய்வல்லுநர் போட்டியைப் பார்த்துக் கொண்டிருந்த 17 வயது மாணவன் ஒருவன் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின் விடுவிக்கப்பட்டார்.

வவுனியாவில்

# சுரேஷ் அணியினரின் அலுவலகம் மீது சூடு!

## வரதர் குழு மீது குற்றச்சாட்டு

வவுனியா,பெப்.24

ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் சுரேஷ் அணியினரின் வவுனியா மாவட்ட அலுவலகத்துக்கு முன்னால் நேற்றுப் பிற்பகல் 4.00 மணியளவில் இளைஞர் குழு ஒன்று துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாகச் செய்திகள் தெரிவித்தன.

வரதராஜப்பெருமாளின் அணியைச் சேர்ந்தோரே தமது அலுவலகத்துக்கு முன்பாக நடமாடி, உறுப்பினர்கள் சிலரைப் பயமுறுத்தியதுடன் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர் என சுரேஷ் அணியினர் வவுனியா பொலீஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

சூட்டுச் சம்பவம் இடம்பெற்றதை அடுத்து அந்த இடத்துக்கு விரைந்த பொலீஸார் நிலைமையைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(உ-7-164)

# உண்ணாவிரதிகளின் உடல் நிலை மோசம்!

## இருவர் ஆஸ்பத்திரியில் அனுமதி

வவுனியா,பெப்.24

விடுதலைப் புலிகளின் தடுப்புக் காவலில் சாகும் வரையிலான உண்ணாவிரதம் மேற்கொண்டு வரும் பதினைந்து படையினரில் இருவர் கடும் சுகவீனமுற்ற நிலையில் நேற்றுமாலை புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர் என "புலிகளின் குரல்" வானொலி நேற்றிரவு தெரிவித்தது.

உண்ணாவிரதிகளில் ஒருவரான உபாலி சோமபால (வயது 30) என்பவர் வலி ஏற்பட்ட நிலையிலும் மற்றொருவரான நிமால் நிசாந்த (வயது 27) மூச்சுவிட முடியாது கடும் நெஞ்சுவலியால் பாதிக்கப்பட்ட நிலையிலும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உண்ணாவிரதிகளைப் பார்வையிடுவதற்காகச் சென்ற லசந்த மோனா (வயது 53) என்பவர் தனது மகனாகிய உபாலி சோமபால ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதை அறிந்து நேற்றிரவு சிறிது நேரம் மயக்கமடைந்தார் எனவும் -

"புலிகளின் குரல்" வானொலி மேலும் தெரிவித்தது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவும் விடுதலைப் புலிகளின் மருத்துவர்குழுவும் மேற்படி உண்ணாவிரதிகளை ஆஸ்பத்திரியில் அனுமதித்தன எனவும் தெரிவிக்கப்பட்டது.

# உண்ணாவிரதிகளை விடுவிக்கும் முயற்சியில் அரசு அசிரத்தை

## உறவினர்கள் கூறுகின்றனர்

வவுனியா,பெப்.24

"எமது உறவினர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்திடம் பல தடவைகள் கோரினோம். ஆனால் அரசு தொடர்ந்து மௌனம் சாதித்து வந்தது"

வன்னியில் புலிகளின் காவலில் உண்ணாவிரதம் இருந்துவரும் 15 யுத்தக் கைதிகளைப் பார்வையிடுவதற்காக அங்கு சென்றுள்ள உறவினர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

'புலிகளின் குரல்' வானொலிக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் கள் இதனைக் கூறி உள்ளனர்.

அந்தப் பேட்டியில் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எமது உறவினர்களை இங்கு வந்து பார்ப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கிய விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு நாம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

கடற்படைச் சூட்டினால்

# காயமடைந்த தமிழக மீனவர் இருவர் யாழ். ஆஸ்பத்திரியில்

## மற்றிருவர் காங்கேசன் முகாமில்

யாழ்ப்பாணம்,பெப்.24

கடந்த திங்கட்கிழமை அதிகாலை காங்கேசன்துறை கடற்பகுதியில் காணப்பட்டதாக கூறப்படும் படகு ஒன்றின் மீது தாக்குதல் நடத்திய கடற்படையினர் அதிலிருந்த 4 இந்திய மீனவர்களை கைது செய்துள்ளனர்.

அவர்களில் இருவர் கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நிலையில் யாழ். வைத்தியசாலையில் நேற்று பிற்பகல் அனுமதிக்கப்பட்டனர்.

யேசு ஆரோக்கியம் தோமஸ் கிப்சன் (வயது 24) மற்றும் சேவையர் சபேசன் நிக்கலஸ் (வயது29) ஆகிய இருவருமே படுகாயமடைந்த நிலையில் நேற்று பிற்பகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். நான்குக்கு மேற்பட்ட வேட்டுக்கள் தைத்துள்ள அவர்களுக்கு நேற்று மாலை சத்திரசிகிச்சை செய்யப்பட்டதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

கைதுசெய்யப்பட்ட மற்றைய

(12 ஆம் பக்கம் பார்க்க)

# நோர்வே தூதுவர் வருகை

யாழ்ப்பாணத்திற்கு உத்தியோகபூர்வமற்ற விஜயம் ஒன்றை மேற்கொண்டு இன்று வரும் இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்ட்போர்க் குடாநாட்டு நிலைமை குறித்து ஆராய இருக்கிறார்.

தமது பாரியாரான ட்ரைன் சகிதம் யாழ். வரும் அவர் இங்குமூன்று நாள்கள் தங்கியிருப்பார்.

ஐநா. அபிவிருத்தித் திட்ட அலுவலகத்தில் தங்கியிருக்கும் அவர் சர்வதேச தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் பொது அமைப்பு பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடுவார்.

பொது வைபவம் ஒன்றில் பங்குபற்றிவிட்டு சனிக்கிழமை அவர் கொழும்பு திரும்புகிறார். (இ-3)

# புதிய ஆலயத் திறப்பு விழா

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட

**சங்கானை புனித சலேசியார் ஆலயம்**

எதிர்வரும் மாசித் திங்கள் 26 ஆம் நாள் சனிக்கிழமை
காலை 9.30 மணிக்கு

யாழ். ஆயர் பேரருட் திரு.

**தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை**
அவர்களால்

ஆசீர்வதித்துத் திறந்து வைக்கப்பட்டு, இரண்டாயிரமாம் ஆண்டின் ஆலயத் திருவிழாக் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இப்புனித நிகழ்வில் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

(73938) **பங்குத்தந்தையும், பங்குமக்களும்**


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

உதயம்
1968
-
04
-
10



அஸ்தமனம்
1999
-
03
-
06

அமரர்

## இராசரட்ணம் தங்கவேலு

(தவம்)

**என் தவமே! தவமே! தவமே!**
**நினைவுகளைக் கனலாக்கி**
**நிம்மதியைத் தொலைத்துவிட்டு**
**உங்களை நினைத்து வாடுகின்றோம்**
**உள்ளமதில் பூஜிக்கின்றோம்**
**வான்விட்டு வாருமையா...!**
**எம் கண்களில் ஒரு தரமேனும்**
**வந்து காட்சியளியும் ஐயா!**

இன்று (24-02-2000) வியாழக்கிழமை காலை அன்னாரின் ஆத்ம சாந்திக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும். ஆத்மசாந்தி வேண்டி இறைவனை இறைஞ்சுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
**த.நாகேஸ்வரி, நிதுஷா, விஷுஷா**
(மனைவி) (பிள்ளைகள்)

*T.Nageswary,*
*Bugginyerst - 57*
*79114, Freiburg,*
*Germany.*
*T.P: 004976l4765473*

தகவல்:
**S.பொன்மலர்**
(மைத்துனி) (C/11139)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## திருமதி தம்பிராசா பொன்னம்மா

(கைதடி கிழக்கு)

மலர்வு
1919 - 10 - 17

உதிர்வு
2000 - 01 - 25

**இல்லத்தின் ஒளிவிளக்காய் நல்வழி நமக்கமைத்தாய்**
**இன்பமாய்ப் பேசியென்றும் எம்முடனே மகிழ்ந்திருந்தாய்**
**புன்னகை புரிந்திடுவாய் அம்மம்மா என்று அழைக்கையிலே**
**துன்பமே கண்டறியோம் நீயிங்கு வாழ்ந்தவேளை.**

**திங்கள் ஒன்று சென்றதுவே தங்கள் முகம் கண்டு**
**எம் கரம் குவித்து மலர்தூவி நினை நினைந்து**
**மையரவணிந்த பரமன் பொற்றாளில் சாந்தி நீ பெற்றிடவே**
**கைதடியுறை வேழமுகத்தவன் விரை கழலிறைஞ்சுகின்றோம்.**

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

*சகோதரன், பேரன்,பேர்த்தி,*
*உற்றார், உறவினர்.*

13/2, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
கண்டுக்குளி,
யாழ்ப்பாணம் (C/11150)

## இஸ்லாமிய பாடநூலில் தவறு

தம்பலகாமம்,பெப்.24

கல்வி வெளியீட்டுத்திணைக்களத்தால் அண்மையில் வெளியிடப்பட்ட 7ஆம் தரத்துக்கான இஸ்லாமிய சமய பாடநூல் முஸ்லிம் மாணவர்கள் மத்தியில் அதிருப்தி நிலையைத் தோற்றுவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7ஆம் தரத்துக்கான இந்த இஸ்லாமிய சமய பாடநூலில் முதல் 6 அத்தியாயங்களிலும் 7ஆம் தரத்துக்கான சைவசமய பாட அத்தியாயங்கள் அச்சிடப்பட்டுள்ளன.

மேற்படி அச்சுத்தவறு குறித்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வியமைச்சின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளது.

(ஐ-7)

## 99 தபாற்பொதிகள் வந்தன

யாழ்ப்பாணம்,பெப்.24

நேற்று முன்தினம் காங்கேசன்துறைக்கு வந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் யாழ் குடாநாட்டுக்கான வெளியூர்த் தபாற்பொதிகள் எடுத்துவரப்பட்டன.

இதே கப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட தபால்கள் அடங்கிய 45தபாற்பொதிகள் அனுப்பிவைக்கப்பட்டதாகத் தபால் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ஐ-10)


**MATHS CENTRE**
**Nelliady**
A/L-2000
*வினா - விடை வகுப்பு*
தமிழ்
திரு.கமலரூபன்
இந்து நாகரிகம்
திரு.ராஜேஸ்கண்ணன்
ஆரம்பமாகிவிட்டது.
வடமராட்சியில்
எமது நிறுவனத்தில் மட்டும்
இவ்வகுப்புகள் நடைபெறும்.
(C/11158)

*தரம் 2 முதல் 8 வரை
மாதாந்தப் பரீட்சை
வினாத்தாள்கள்
* புலமைப்பரிசில்
ஊக்குவிப்பு III,IV
பெற்றுக்கொள்ளலாம்.
**BOND**
யாழ்நகர். (73394)

**ராஜா**
யாழ்ப்பாணம்
இன்று மட்டும்
**கோபுர வாசலிலே**
நாளை முதல்
*ஸ்ரீவத்சம்*
காட்சிகள் 10.30, 2.30
(C/11154)

**லிபேட்டி**
அச்சுவேலி
சுதாகர், ராதிகா
நடித்த
*சுவர் இல்லாத சித்திரம்*
காட்சிகள் 10.30, 2.30
T.P -070 - 212223
070 - 212678
(73866)

**நாகம்ஸ்**
சுன்னாகம்
அர்ஜுன்,ரேவதி,
பிரகாஷ்ராஜ்,வடிவேலு
நடித்த
*சுபாஸ்.*
(ரீஸ்ஸ்)
காட்சிகள் 11.00, 2.30
(புதிய நேரம்)
(C/11105)


# மரண அறிவித்தல்கள்

செல்வன்

## செல்வராசா தாமரைச்செல்வன் B.A.

(Group Leader, EUREKA FORBES Ltd., TUTTICORIN, INDIA)

கெனடி வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டு கலைமகள் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம், தூத்துக்குடி, இந்தியாவில் வசித்தவரும் யாழ்.செங்குந்தா இந்துக் கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரும் இந்தியா தூத்துக்குடி EUREKA FORBES Ltd. முகாமையாளருமான தாமரைச்செல்வன் B.A. திங்கட்கிழமை (21.02.2000) தூத்துக்குடியில் காலமானார்.

அன்னார் க.செல்வராசா (முன்னாள் தட்டெழுத்தாளர், யாழ்ப்பாணம், வவுனியா) - பத்மசோதி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் இலங்கேஸ்வரன், பிரதீபன், இளந்திரையன் ஆகியோரின் பாசமிகு அண்ணரும் காலஞ்சென்ற இராசையாமுதலி - தவணி தம்பதிகளின் அன்பு மருமகனும் பத்மகாந்தனின் (கனடா) ஆசை மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்றுமுன்தினம் (22.02.2000) செவ்வாய்க்கிழமை தூத்துக்குடி இந்தியாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கெனடி லேன்,
இராமலிங்கம் றோட்,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.
(73936)

தகவல்:
**இ.சண்முகநாதன G.S.**
(அத்தான்)

## வல்லிபுரம் சிறிநிவாசகம்

(கட்டப்பிராய்)

கட்டப்பிராய் கலைமணி வீதியைச் சேர்ந்த வல்லிபுரம் சிறிநிவாசகம் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - பவளம் தம்பதிகளின் ஏக புத்திரனும் கலவியாங்காட்டைச் சேர்ந்த பசுபதி - பாக்கியம் தம்பதிகளின் மருமகனும் சகுந்தலாதேவியின் அன்புக் கணவரும் மங்கையற்கரசி, கிருஷ்ணதாசன், உலகநாதன் (ஜேர்மனி), சுபாஜினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் மகேஸ்வரன் (தேனமுதம் உரிமையாளர், யாழ்ப்பாணம்), ஞானமணி, நந்தா (ஜேர்மனி), சுபாகரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் நிமலன் (யா/மத்திய கல்லூரி), துவாரகா (யா/இந்து மகளிர் கல்லூரி), தனேசன், டயானி, டானுஷா (யா/இந்து ஆரம்பப் பாடசாலை), அனோகரன், சகானா (ஜேர்மனி), நிஷங்கன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.02.2000) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் முற்பகல் 11.30 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலைமணி லேன்,
கட்டப்பிராய்,
யாழ்ப்பாணம்.
(73937)

தகவல்:
**சி.கிருஷ்ணதாசன்** (மகன்)
**இ.மகேஸ்வரன்** (மருமகன்)

## கதிரவேலு நடராசா

(முன்னாள் நடத்துநர், இ.போ.ச.)

வடலியடைப்பைச் சேர்ந்த கதிரவேலு நடராசா நேற்றுமுன்தினம் (22.02.2000) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா சிவக்கொழுந்து அவர்களின் அன்புக் கணவரும் சிவராசா, நாகராசா (கிராம சேவையாளர், சில்லாலை தெற்கு), அருளேஸ்வரி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் கமலாதேவி, கமலாம்பிகை, சந்திரசேகரன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (23.02.2000) புதன்கிழமை நடைபெற்றுப் பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

பத்தானைக்கேணி,
டச்சு வீதி,
வட்டுக்கோட்டை.
(73939)

தகவல்:
**ந.நாகராசா**
**ந.சிவராசா**
(பிள்ளைகள்)

## கணபதிப்பிள்ளை சோமஸ்கந்தமூர்த்தி

(C.S. மூர்த்தி A.M.N)
(RTD. ORGANIZER OF EDUCATION,
MALAYSIAN TAMIL SCHOOL)

கோலாலம்பூரைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சோமஸ்கந்தமூர்த்தி (C.S மூர்த்தி A.M.N) நேற்றுமுன்தினம் (22.02.2000) செவ்வாய்க்கிழமை கோலாலம்பூரில் காலமானார்.

அன்னார் அராலி மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - திலகவதி தம்பதிகளின் அருமைப் புதல்வனும் காலஞ்சென்ற வைத்தீஸ்வரன் வள்ளியம்மை (இளைப்பாறிய ஆசிரியை), கணபதிப்பிள்ளை, பரமேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாலேந்திரா, செல்வராசா சந்திரவதனா, சிவதாசன் செந்தில்அரசி, குலசேகரம் வரலட்சுமி, செல்வராசா செந்தில்மல்லிகா ஆகியோரின் அன்பு மாமனாரும் சஞ்சீவன், லக்சுமிகாந்த், ரமி, அபிராமி, பிரதாயினி, ஸ்ரீஹர்சினி, சுமங்கலை, நிதர்சனா, துளசிகா, தர்சிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நேற்று (23.02.2000) புதன்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்லூரி வீதி,
வட்டுக்கோட்டை.
(C/11161)

தகவல்:
**க.குலசேகரம்**
(கிராம அலுவலர்)
(பெறாமகன்)

## க.கந்தையா (க.க.)

நெடுந்தீவைப்பிறப்பிடமாகவும், புங்குடுதீவு 5ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட க.கந்தையா (க.க) அவர்கள் 21.02.2000 திங்கட்கிழமை வன்னேரிக்குளத்தில் இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக்கணவரும் தவமணிதேவி (இந்தியா), சரோஜினிதேவி (வன்னேரிக்குளம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற தளையசிங்கம், ஆறுமுகம் (வீரகத்தி) ஆகியோரின் மாமனாரும் தவச்செல்வன், வனஜா (பிரான்ஸ்), வாசுகி (இந்தியா), விக்னேஸ்வரன், சுகந்தி (பிரான்ஸ்), மகேஸ்வரன் (பிரான்ஸ்), நந்தினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்றுமுன்தினம் (22.02.2000) செவ்வாய்க்கிழமை வன்னேரிக்குளத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

42, வன்னேரிக்குளம்,
கிளிநொச்சி
(73946)

தகவல்:
**கு.சந்திரா**

# புதிய கல்வித்திட்டத்துக்கு உட்பட்ட

# முக்கிய பாட நூல்கள் வரவில்லை

## மாணவர்கள் பாதிப்பு

வலி வடக்கு, பெப். 24

யாழ். மாவட்டத்துக்கு இலவச பாடநூல்கள் காலம் பிந்தி அனுப்பப்பட்ட போதிலும் கூட புதிய கல்வித் திட்டத்துக்கு உட்பட்ட தரம் 7, தரம் 10 ஆகிய வகுப்புகளுக்கு முக்கிய பாடநூல்கள் அனுப்பி வைக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

தரம் 7 இல் புதிய கல்வித் திட்டத்தின் கீழ் முக்கிய பாடங்களான கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கான புத்தகங்கள் இங்கு அனுப்பி வைக்கப்படாமையால் மாணவர்களுக்கு அவை வழங்கப்படவில்லை.

தரம் 7 கணித பாடப் புத்தகங்கள் சில பாடசாலைகளுக்கு மூன்று, நான்கு புத்தகங்கள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன.

வலிகாமம் கோட்டத்தில் சில பாடசாலைகளுக்குக் கணித பாடநூல் ஒன்று அல்லது இரண்டு மட்டும் வழங்கப்பட்டுள்ளன. சில பாடசாலைகளுக்கு இவை அறவே வழங்கப்படவில்லை.

தரம் 10 க்கான விஞ்ஞானம், சமூகக்கல்வி, ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கான நூல்களும் அனுப்பி வைக்கப்படவில்லை

இதே நேரம் ஆண்டு 7 தரம் 10 க்கான சிங்களப் புத்தகங்கள் பாடசாலைகளுக்குத் தாராளமாகக் கிடைக்கப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

(இ-86)

## கோழிகளுக்குநோய்தடுப்பு மருந்து

திருநெல்வேலி, பெப். 24

யாழ். நாவலர் வீதியிலுள்ள கால் நடை உற்பத்தி சுகாதாரத்திணைக்களத்தின் கால் நடை வைத்திய நிலையத்தில் கோழிகளுக்கு அம்மை நோய் தடுப்பு ஊசி மருந்தும் 'ராணிகற்' எனப்படும் தாக்க நோய் தடுப்பு மருந்தும் ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 9-30 மணி முதல் 10-30 மணிவரை ஏற்றப்பட்டுவருகின்றது.

இதேவேளை செயற்கை முறையில் தங்கள் ஆடு, மாடுகளைச் சினைப்படுத்த விரும்புபவர்கள் தினசரி காலை 10 மணிக்கு முன்னர் வைத்திய நிலைய அலுவலகத்தில் தங்கள் பெயர் மற்றும் முகவரியைப் பதிவு செய்து குறிக்கப்படும் நாளில் சினைப்படுத்திக் கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மறிஆடுகளுக்கு அவை சினைப்பட்டு மூன்றரை மாதத்தில் ஏற்புத் தடுப்பு ஊசி மருந்து ஏற்றப்பட வேண்டும் என்றும், குட்டி ஈன்றவுடன் குட்டிக்கு ஏற்புத் தடுப்பு ஊசி ஏற்றப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதே சமயம் ஆடு, மாடுகளுக்கு ஏற்றப்படும் ஏற்பு நோய்த்தடுப்பு ஊசிக்கு இங்கு தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(இ-135)

## குமுதினிப்படகு சேவை நிறுத்தம்

யாழ்ப்பாணம், பெப். 24

சில அவசர திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட இருப்பதால் குமுதினிப் படகுச் சேவை இன்றுவியாழன் முதல் மறு அறிவித்தல் வரை அதன் வழமையான சேவையில் ஈடுபடமாட்டாது என வீதி அபிவிருத்தி அதிகாரசபை அறிவித்துள்ளது.

(இ)

## சுய முயற்சிக் கடன்

மல்லாகத்தில் தற்போது இயங்கி வரும் காங்கேசன்துறை இலங்கை வங்கிக்கிளையில் கடந்த ஆண்டு 26 பேருக்கு சுயமுயற்சிக் கடன் வழங்கப்பட்டது. சிறுகைத் தொழில், விவசாயம், வியாபாரம் ஆகிய சுய தொழில் முயற்சிகளுக்கு 8 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா கடனுதவி வழங்கப்பட்டுள்ளதாக வங்கி கிளை முகாமையாளர் என். சிவரத்தினம் தெரிவித்தார்.

## சின்னமுத்துநோயைகட்டுப்படுத்த தடுப்பூசி ஏற்றப்படுகிறது

திருநெல்வேலி, பெப். 24

யாழ். மாவட்டத்தில் சின்னமுத்து நோயினால் குழந்தைகளும் சிறுவர்களும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இதனை அடுத்து இந்தநோய் அதிகமாகக் காணப்படும் இடங்களில் குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களினால் தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகின்றது.

கொழும்பிலுள்ள சுகாதார திணைக்கள தலைமைப்பீடத்தின் தொற்று நோய்த்தடுப்பு பிரிவு சின்னமுத்து நோய் பற்றியும் அதற்கான தடுப்புச் சிகிச்சை பற்றியும் சுற்றறிக்கை ஒன்றை யாழ். சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனைக்கு அனுப்பி வைத்துள்ளது.

மக்கள் நெருக்கமாகவாழும் இடங்களிலும், அகதி முகாம்களிலும் இந்த நோய் பரவ வாய்ப்பு உள்ளதாகவும், இந்த இடங்களில் 9 மாதத்துக்கும் 10 வயதுக்கும் இடைப்பட்டோருக்கும் மற்றும் சிறுவர்களுக்கும் தடுப்பு ஊசி ஏற்றப்பட வேண்டும் என்று சுற்றறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனை அடுத்து சின்னமுத்து நோய் அதிகமாகக் காணப்படும் இடங்களில் தடுப்பு ஊசி அவ்வப் பிரிவு குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களினால் ஏற்றப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை சின்னமுத்து நோய் கண்டவர்களை அண்மையிலுள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்குக் கொண்டு சென்று டாக்டரிடம் காட்டி வைத்திய சிகிச்சையையும், வைத்திய ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சின்னமுத்து நோய் அதிகமாகக் காணப்படும் பகுதியிலுள்ள மக்கள் தங்கள் பிரிவு ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையத்துடன் அல்லது குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு 9 மாதத்திற்கும் 10 வயதுக்கும் இடைப்பட்ட தங்கள் குழந்தைகளுக்கு நோய்த் தடுப்பு ஊசி மருந்தை ஏற்றுவித்துக் கொள்ள முடியும் என்று சுகாதார திணைக்கள உயரதிகாரி ஒருவர் இது பற்றி தகவல் தருகையில் தெரிவித்தார்

## நலன்புரிநிலைய குடும்பங்களுக்கு வாளிகள்

வலி. கிழக்கு, பெப். 24

வலி. கிழக்குப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளில் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள 152 குடும்பங்களுக்கு நேற்று முன்தினம் இலவசமாக வாளிகள் வழங்கப்பட்டன.

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையங்கள் கோப்பாய் நலன் காக்கும் பிரிவு அலுவலகம் ஊடாகவே வாளிகளை மக்களுக்கு வழங்கியுள்ளது.

(இ-180)

## வார நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், பெப். 24

யாழ். பல்கலைக்கழகத்தின் 'பெடாஸ்' வார நிகழ்வுகள் இன்று பிற்பகல் 4 மணிக்கு மருத்துவபீட மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளன.

பல்கலைக்கழக உடற்கல்வி மாணவர்களிடையே நடத்தப்படுகின்ற 'பெடாஸ்' வாரத்தின் கலை, கலாசார விளையாட்டு நிகழ்வுகளில் இன்று வலைப்பந்தாட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வினை யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி கற்கைநெறி இணைப்பாளர் செல்வி தேவரஞ்சினி கிருஷ்ணன் ஆரம்பித்து வைப்பார்.

(இ10)

## விண்ணப்பம் கோரப்படுகிறது

வடமராட்சி, பெப். 24

வடமராட்சி கல்வி வலயத்தில் தொலைக்கல்வி போதிப்பதற்கென தொலைக்கல்வி சிரேஷ்ட போதனாசிரியர் பதவிக்கும் வலயமட்ட வணிக ஆசிரியஆலோசகர் பதவிக்கும் உடற்பயிற்சி ஆசிரிய ஆலோசகர் பதவிக்கும் வடமராட்சி கல்வித் திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அத்துடன் பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி கோட்டங்களில் பணியாற்றுவதற்கென தமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆரம்பகல்வி, சைவசமயம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரிய ஆலோசகர்கள் பதவிக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பதவிகளுக்கான விண்ணப்பங்கள் இம் மாதம் 29 ஆம் திகதிவரை ஏற்றுக் கொள்ளப்படும் என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா தெரிவித்துள்ளார். (இ-173-118.

# யாழ்ப்பாணத்தை வாழ்விக்க முடியும் என்ற நம்பிக்கை தரும் எழுத்துக்கள்

## பாராட்டு விழாவில் பேச்சு

நல்லூர், பெப். 24

பத்திரிகைத் தொழிலைச் சமுதாயக் கடமையாகக் கருதிச் செயற்பட்ட சின்னத்தம்பி அவர்களின் எழுத்துக்கள் யாழ்ப்பாணத்தை மீண்டும் வாழவைக்க முடியும் என்ற நம்பிக்கையை ஊட்டுகின்றன.

இவ்வாறு சமூகச் சூழல் பாதுகாப்பு நிறுவனம் மூத்த பத்திரிகையாளர் வீ. சின்னத்தம்பிக்கு அளித்த பாராட்டு விழாவில் பேசிய பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலய அதிபர் கா. நடராசா கூறினார்.

யாழ். எழுத்தாளர் ஒன்றியத்தில் பொருட் திட்ட இணைப்பாளர் க. குணேந்திரதாசன் தலைமையில் இம்மாத ஆரம்பத்தில் நடைபெற்ற மேற்படி விழாவில் நடராசா மேலும் பேசும் போது கூறியதாவது:

சமூக அரசியல் விமர்சனம் போட்டிகள் போன்ற எழுத்துக்களில் மட்டுமன்றி இலக்கிய வடிவிலும் தனது ஆற்றலை வெளிப்படுத்திய மூத்த எழுத்தாளரான அவரது கருத்துக்கள் மற்றும் சமூகத்தை நோக்கியபார்வை என்பன முக்கியத்துவம் மிக்கன. சிறந்த பத்திரிகையாளரான சிவநாயகம் அவர்களின் பாராட்டைப் பெற்ற இவர், உத்தியோகம், பத்திரிகைத்துறை, சீனாவில் பெற்ற அனுபவங்கள் ஆகியவற்றை நூலாக வெளியிட வேண்டும் — என்றார்.

குணேந்திரதாசன் தமது தலைமையுரையில் கூறியதாவது;

தனது எழுத்தாற்றலால் பல்வேறு துறைகளிலும் தான் பெற்ற அறிவை மார்க்சியக் கருத்துக்களை மக்களுக்குத் தந்து அனைத்து மக்களும் சமத்துவம் மிக்கவர்களாக விளங்க வேண்டும் என்ற உயர்ந்த சிந்தையுடன்வாழும் ஒருமனிதர் அவர்.

பின்தங்கிய ஒடுக்கப்பட்ட மக்களுக்காகத் தம்மை அர்ப்பணித்த பத்திரிகையாளரான அவர் இனவாத அடிப்படையினால் மார்க்சிய வாதிகளிடையே பிளவு ஏற்பட்ட போதும் சர்வதேச ரீதியாக அனைத்து மக்களும் ஒன்றுபட வேண்டும் என்று பணியாற்றியவர். சிறந்த எழுத்தாளராக, பத்திரிகையாளராக விளங்கும் அவரது பணிகள் தொடர வேண்டும்— என்றார்.

அரசாங்க லிகிதர் சேவைச் சங்க யாழ். கிளைத் தலைவர் இ. தவராஜா பேசும் போது கூறியதாவது:

மூத்த பத்திரிகையாளராக விளங்கும் அவர் தொழிற்சங்கப் பட்டறையின் விளைநிலம். மார்க்சிய வாதிகளிடையே கருத்து முரண்பாடுகள் ஏற்பட்ட சமயம் சண்முகதாசனோடு இணைந்து சரியான பாதை எது என்பதை வலியுறுத்தியவர். வருமானத்தைக் கருதாது தான் பற்றிக்கொண்ட சித்தாந்தத்தின் உயர்ந்த கருத்துக்களால் சமூகத்தில் விழிப்புணர்வைத் தோற்றுவித்தவர். அவர் சமூக மாற்றம் உணர்வின் அடிப்படையில் உள்ளது. அந்த மாற்றம் ஏற்படும் போதுதான் உலகம் மாறும் என்ற சிந்தனையுடன் செயற்பட்டவர். அவரது பணிகள் தனித்தன்மையானவை — என்றார்.

வங்கி ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த கா. சிவபாலன், பேராசிரியர் சோ. கிருஷ்ணராஜா, "தாயகம்" பத்திரிகை ஆசிரியர் எஸ். தணிகாசலம், கூட்டுறவாளர் எஸ். சிவஞானம், இந்து இளைஞர் மன்றத் தலைவர் கே. தணபாலன், பொருட் நிறுவனத்தைச் சேர்ந்த என். மூர்த்தி ஆகியோரும் கூட்டத்தில் உரையாற்றினர். விழா நாயகர் சின்னத்தம்பி பதிலுரை வழங்கினார். (அ-103)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பொன்னம்பலம் ஜெயலஷ்சுமி

நல்லூர், 26, செம்மணி வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பொன்னம்பலம் விஜயலஷ்சுமி 23-02-2000 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும் கமலேஸ்வரி (கொழும்பு), யோகேஸ்வரி, கிருஷ்ணசாமி (டென்மார்க்), சுந்தரலஷ்சுமி, விஜயராணி, விஜயகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் தம்பையா (கொழும்பு), காலஞ்சென்ற கதிரவேலு (கொழும்பு), சரச்சந்திரன், சிவஞான சுந்தரம் (அச்சுவேலி), ஜெயராணி, மாலினி ஆகியோரின் மாமியாரும் குணசீலன், ரவீந்திரகுமார், குலேந்திர ராஜன், தர்சினி, வதனா, ரமேஸ், சுகிர்தா, பங்கஜன், ருதுசாந் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

இறுதிக்கிரியைகள் இன்று (24-2-2000) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காகச் செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிவஞானசுந்தரம்
(மருமகன்)

26, செம்மணி வீதி,
முத்திரைச்சந்தை,
நல்லூர்.

(73318)

## ஞானப்பிரகாசம் மரியம்மா
### (துங்கமணி)

யாழ்ப்பாணம் பாஷையூரைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி ஞானப்பிரகாசம் மரியம்மா அவர்கள் நேற்று (23-02-2000) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் அவர்களின் அன்பு மனைவியும், அருட்சகோதரர் பிரியதாசன் (புனித பிரான்சிஸ்கன் சபை — மட்டக்களப்பு) அவர்களின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24-02-2000) வியாழன் மாலை 4.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
F. யூல்ஸ் கெரலின்
(மருமகன்)

பாஷையூர்,
யாழ்ப்பாணம்.

(73925)

# புலம்பெயர்ந்தோருக்கென தனியான நுண்கலைப்பீடம்

சூரிச், பெப். 24 — சுவிஸில் இருந்து சங்கீத் —

உலகத்தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் கல்விச் சேவைப் பகுதியினர் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்களின் நலன் கருதி நுண்கலைப்பீடம் ஒன்றினை நிறுவ நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கடந்த வெள்ளி சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் சுவிற்சலாந்து நாட்டின் சூரிச் நகரத்தில் நடைபெற்றது.

இதில் சுவிஸ், ஜேர்மனி, இத்தாலி மற்றும் லண்டன், பிரான்ஸ், நோர்வே, அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளில் புலம்பெயர்ந்து வசிக்கும் நுண்கலைத்துறை ஆசிரியர்கள் மற்றும் துறை சார் நிபுணர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையான இலங்கை, இந்தியத் தமிழர்கள் கலந்து கொண்டனர்.

பேராசிரியர் கா. சிவத்தம்பியின் தலைமையில் நடைபெற்ற மேற்படி கலந்துரையாடலில் நுண்கலைப்பீடம் ஒன்றை அமைக்க வேண்டிய தன் அவசியம் குறித்துப் பலரும் பிரஸ்தாபித்தனர் எனவும்—


இதனை அடுத்து புலம்பெயர்ந்து வசிக்கும் தமிழர்களுக்கு நுண்கலைத்துறைகளில் போதிய பயிற்சியினை வழங்கும் வகையில் நுண்கலைப்பீடம் ஒன்றை அமைப்பது எனவும்—

அதனூடாக நுண்கலை தொடர்பான பொதுப் பரீட்சைகளை நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டதாக உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் கல்விச் சேவைக்கான அமைப்பாளர் துங்கராஜா மகேந்திரராஜா தெரிவித்துள்ளார்.

புலம்பெயர்ந்த தமிழ் மாணவருக்காக பொதுவான நுண்கலைப் பாடத்திட்டத்தை உருவாக்குவதற்காக இந்தக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ஜ-150-7)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 01 — 09 — 1936

மறைவு 25 — 02 — 1999

அமரர் பாக்கியநாதர் மேரி யோசப் அன்ரனி

(முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் - நெடுந்தீவு)

சீவியத்தில் போன்று நான் இப்பொழுதும்
உங்களுடன் இருக்கின்றேன்.

– புனித அம்புறோஸ்

ஆறாத்துயருடன் அன்பு
மனைவி, மக்கள்.

நெடுந்தீவு (73898)

## ஓராண்டு நினைவலைகள்



மண்ணுலகில் 05 — 03 — 1926

விண்ணுலகில் 24 — 02 — 1999

அமரர்

முத்தையா டானியல் சிவப்பிரகாசம்

(சுற்கண்டு அப்பா)

மரணமே! உன் கூர் எங்கே?
பாதாளமே! உன் ஜெயம் எங்கே?
(1 கொரி—15:55)

சனிக்கிழமை (26—2—2000) அன்று காலை 11-30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் விசேட ஆராதனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள், சபையார் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பாலஜீவனம்,
சற்சோவளம்,
பருத்தித்துறை. (73785)

## அனுதாபத் தீர்மானம்

'உலகளாவிய ரீதியில் தமிழர்களின் உரிமைகளுக்காகவும் அவர்கள் அனுபவித்து வரும் இன்னல்களுக்கு எதிராகவும் குரல் கொடுத்த அமரர் குமார் பொன்னம்பலத்தின் திடீர் மறைவு எம் அனைவருக்கும் பேரிழப்பாகும். அன்னாரின் மறைவுக்கு எமது பிரதேசசபை தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றது'

இவ்வாறு தெரிவிக்கும் அனுதாபத் தீர்மானம் ஒன்று அண்மையில் நடைபெற்ற வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டுள்ளது. சபையின் உபதலைவர் வி. சண்முகநாதன் தலைமையில் கடந்த 31-01-2000 ஆம் திகதியன்று மல்லாகத்தில் உள்ள சபை மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் குமார் பொன்னம்பலத்தின் மறைவுக்கு இரண்டு நிமிட நேர மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

(ஐ-135)


## பனை அபிவிருத்திச் சபை

### புளுக்கொடியல், ஒடியல் கொள்வனவு

தரமான புளுக்கொடியல், ஒடியல் கிலோ ரூ. 30 வீதம் பனை அபிவிருத்திச் சபையால் கொள்வனவு செய்யப்படுகின்றது.

மேலதிக விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

சந்தைப்படுத்தும் பகுதி,
பனை அபிவிருத்திச் சபை,
859, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தலைமையகம்,
பனை அபிவிருத்திச் சபை,
53, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி 11143)


## வாசகர் திருமுகம்

### ஆசிரியர் நியமனம் என்ன கேலிக் கூத்தா?

இன்று யாழ்ப்பாணம் குடாநாட்டில் வேலையில்லாப் பிரச்சினை தீராத தொடர் கதையாவே நீடிக்கிறது. இதற்கு மேலதிகமாக இந்த மாத நடுப்பகுதியில் இடம்பெற்ற நடவடிக்கை ஏற்பாடு ஒன்று பொறுப்பு வாய்ந்தவர்களைச் சந்தேகத்தோடு பார்க்க வைக்கின்றது.

இரண்டாயிரம் ஆண்டு, முதலாம் மாத நடுப்பகுதியில் பல பட்டதாரிகளுக்கு வடக்கு—கிழக்கு மாகாண சபையின், கல்வி அமைச்சினால் ஆசிரிய நியமனக் கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்தன. கடிதத்தில் குறிப்பிட்ட பிரகாரம் தமது பிரதேசத்தில் அமைந்திருக்கும், கல்வி வலய அலுவலகத்திற்கு நியமனத்தை பொறுப்பேற்க சென்ற போது நியமனக் கடிதங்கள் பெறப்பட்டன.. பாடசாலை விபரம் பத்திரிகையில் அறிவிக்கப்படும் எனவும் கூறப்பட்டது.

இரண்டு நாள்கள் கழித்து பட்டதாரிகள் சென்ற போது ''நூலக அபிவிருத்தி உத்தியோகத்தர்'' பதவியில் இருக்கும் பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கக் கூடாது என்று திருகோணமலையில் இருந்து அறிவித்தல் வந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் மொழி பெயர்ப்பாளர் அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் கூட்டுறவு துறையில் பணிபுரியும் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவதற்கு தடை எதுவும் தெரிவிக்கப்படாதோடு இதன் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட பட்டதாரிகளுக்கு நியமனங்களும் வழங்கப்பட்டன. அவர்கள் மகிழ்ச்சியோடு ஆசிரிய நியமனத்தை பொறுப்பேற்றுக் கொண்டனர்,

ஆனால் 11-02-2000 ஆம் திகதியன்று மாகாண சபை கல்வித்துறைக்கும் நியமனத்துக்கும் பொறுப்பு வாய்ந்தவர்களிடமிருந்து அடுத்த கடிதம் அனுப்பப்பட்டிருந்தது மாகாணக் கல்வி அமைச்சின் கீழ் ஏனைய தொழில்களில் உள்ள பட்டதாரிகளின் விவரங்களை அனுப்பி வைக்குமாறும் விவரத்தின்படி இவர்களின் ஆசிரிய நியமனத்தை ரத்து செய்வதற்கு உதவியாக இருக்கும். என்றும் தெரிவிக்கப்பட்டது.

மாகாணக் கல்வி அமைச்சு வழங்கிய கல்வி தொடர்பான இந்நியமனம் என்ன கேலிக் கூத்தா? ஆசிரிய நியமனத்தை ரத்துச் செய்யும் முடிவை எடுக்கும்போது வேலையில் உள்ள எவருக்கும் ஆசிரிய நியமனம் வழங்கக் கூடாது என்று உத்தரவிட்டிருந்தால் பிரச்சினை பெரிதாகி இருக்கமாட்டாது. முதலில் நூலக அபிவிருத்தி உத்தியோகத்தர் மட்டும் என்று கரணம் அடித்துவிட்டு ஏனையோருக்கு நியமனக் கடிதங்களை வழங்கிவிட்டு பாடசாலையில் கற்பித்தல் தொடங்கிய சில வாரங்களுக்குப் பின் நியமனத்தை ரத்துச் செய்யலாமா? இனிவரும் காலங்களிலும் இவ்வாறு தான் நியமனங்கள் நடைபெறுமா? அரசாங்க நியமனங்களை எவ்வாறு நம்புவது?

சம்பந்தப்பட்டவர்கள் ஒன்றைச் சிந்திக்க வேண்டும். 1994 இல் வெளியேறிய கலைப் பட்டதாரிகளுக்கும் 1996 இல் வெளியேறிய விஞ்ஞானப் பட்டதாரிகளுக்கும் ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டபோதும் இம்முறை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை கையாளப்படவில்லை. வேலையில் உள்ள பட்டதாரிகள் ஒரு சிலரும் உள்வாங்கப்பட்டனர்.

இலங்கையில் ஒருவர் விரும்பும் தொழிலைச் செய்யலாம். இதை மறுப்பது அடிப்படை மனித உரிமை மீறல் ஆகும். எனவே இதைக் கவனத்திற் கொண்டு ரத்துச் செய்யப்பட்ட நியமனத்தை மீள வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா? இது சம்பந்தமாகப் பொறுப்பு வாய்ந்தவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

பாதிக்கப்பட்டவர்கள் சார்பில்
க அ. அழகன்

மீசாலை.

### வித்தியாசமான அளவுகோல்களா?

மக்களின் அத்தியாவசிய தேவைகளில் மின்சாரமும் இப்போது இன்றியமையாத இடத்தினைப் பிடித்துள்ளது. ஆனால் இம்மின்சாரத்தினை அனைவரும் பெற முடியாதுள்ளது. அதாவது இங்கு ஒரு வீட்டில் பழைய இணைப்புப் பெற்றுக்கொண்டதற்குரிய பதிவு உண்டு. எனினும் புதிதாக விண்ணப்பம் நிரப்பி சுன்னாகம் மின்சார நிலைய அலுவலகத்துக்கு மாலுசந்தி மின்சார நிலைய அலுவலகத்தினூடாக அதனை அனுப்பியிருந்தனர். ஆனால் இதுவரை இணைப்புத் தரவில்லை. புதிதாக இணைப்புப் பெறுபவர்களுக்கு இணைப்புக் கொடுக்கிறார்கள்

இவ்விடயம் சம்பந்தமாக மாலுசந்தி மின்சார நிலைய அலுவலகத்தில் கேட்டபோது புதிதாக இணைப்புப் பெறுபவர்கள் பணம் செலுத்தியதனால் அவர்களுக்கு இணைப்புக் கொடுக்கப்படுவதாகக் கூறப்பட்டது. சரி அப்படியானால் பழைய பதிவுகாரர்கள் பழைய நிலுவையாக எவ்வளவு செலுத்த வேண்டும் என அறிவித்தால் அந்த நிலுவையினைச் செலுத்தி இவர்களும் மின்சாரத்தினைப் பெற முடியுமே; அதிகாரிகள் இவ்விடயத்தில் ஏன் வித்தியாசமான அளவுகோல்களைப் பாவிக்கிறார்கள்.

இவர்கள் அக்கறையுடன் செயற்பட்டு நிலுவையினை அறியத்தந்தால் இதுவரை மின்சாரத்தினைப் பெறாத பழைய பாவனையாளர்களும் மின்சாரம் பெறமுடியுமல்லவா?

கே. கிருஷாந்தன்

இமையாணன் கிழக்கு.

## அடையாள அணிவகுப்பு

தர்மபுரியில் பல்கலைக்கழக மாணவிகள் மூவர் பஸ்ஸுடன் எரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டிருந்த அ.தி.மு.க. ஆதரவாளர்கள் அடையாளம் காட்டப்பட்டுள்ளனர்.

சம்பவத்தை நேரில் கண்டவர்களும், கல்லூரி மாணவிகளும் சேலம் சிறைச்சாலையில் நடந்த அணிவகுப்பில் கலந்துகொண்டு சந்தேக நபர்களை அடையாளம் காட்டினர்.

இந்தச்சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட அ.தி.மு.க. தொண்டர்கள் 22 பேர் தடுத்து வைக்கப்பட்டமை தெரிந்ததே.

(இ-3)

## தாய்வான் பதிலடி

பெய்ஜிங், பெப். 24

மீண்டும் சீனாவுடன் இணையத் தாய்வான் முன்வராவிட்டால் இராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் என்று சீனா விடுத்துள்ள அறிவிப்புக்கு தாய்வான் பதிலடி கொடுத்துள்ளது.

தனி உரிமை பெற்ற சுதந்திர நாடாகத் தாய்வானை ஏற்க வேண்டும் என்றும் — அன்றேல் யுத்தத்துக்கு நாமும் தயார் என்றும் — தாய்வான் சீனாவுக்கு அறிவித்துள்ளது.

அதேசமயம் — இராணுவ வலிமையை வளர்க்கத் தாம் திட்டமிட்டுள்ளதாகவும் தாய்வான் அறிவித்துள்ளது.

(இ-3)

## உடன்பாடு கைச்சாத்து

வாஷிங்ரன், பெப். 24

எரிசக்தி தொழில் நுட்பம், அறிவியல், அணுசக்தி கட்டுப்பாடு ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்தும் வகையில் அமெரிக்காவும் இஸ்ரேலும் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

இந்த உடன்படிக்கை காரணமாக இஸ்ரேல் நிபுணர்கள் அமெரிக்க அணு நிலைகளில் பயிற்சி பெற வாய்ப்புக் கிடைத்துள்ளது.

(இ-3)

## நீர் மூழ்கிக் கப்பல் தயாரிப்பதில் இந்தியா

புதுடில்லி, பெப். 24

அணுசக்தியினால் இயங்கக் கூடிய நீர் மூழ்கிக் கப்பல்களை இந்தியா தயாரிக்க விருப்பதாக இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தெரிவித்துள்ளார்.

இந்தக் கப்பலைத் தயாரிக்கும் ஆரம்ப நடவடிக்கைகள் தொடங்கிவிட்டன என்றும் அவர் கூறினார்.

விமானந்தாங்கிக் கப்பல்களையும் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளதாக அவர் மேலும் சொன்னார்.

(இ-3)

## திரையரங்கு மீது தாக்குதல்

தமிழகத்தில் பிரபல நடிகர் கமலகாசன் இயக்கிய 'ஹேராம்' என்னும் திரைப்படம் திரையிடப்பட்ட திரையரங்கு தீவிரவாதிகளால் தாக்கப்பட்ட சம்பவம் மேற்குவங்கத்தில் இடம் பெற்றுள்ளது.

மகாத்மா காந்தியை கொச்சைப் படுத்தும் வகையில் இந்தப்படத்தில் சில காட்சிகள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவித்தே அந்தத் திரையரங்கைத் தாக்கியவர்கள் கூறினர்.

(இ-3)

தமிழ் மொழிக் கல்வி விவகாரம்

# கருணாநிதி-ஜெயலலிதா இடையே பனிப்போர் வெடித்துள்ளது

சென்னை, பெப். 24

தமிழகத்தில் தமிழ்மொழி மூலக் கல்வியைக் கட்டாயமாக்கும் தமிழக அரசின் உத்தரவு காரணமாக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதிக்கும் அ. தி. மு. க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவுக்கும் இடையில் பனிப்போர் வெடித்துள்ளது.

தமிழ்மொழி மூலமான கல்வியை கட்டாயமாக்கும் உத்தரவை தமிழக அரசு விடுத்திருந்தது.

இந்த உத்தரவைக் கண்டித்து அ. தி. மு. க. செயலாளர் செல்வி ஜெயலலிதா அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

''தமிழக அரசின் இந்த உத்தரவு காரணமாக ஹிந்தி நுழைந்து விடும். எனவே இந்த உத்தரவை அரசு உடன் ரத்துச் செய்ய வேண்டும்'' என்று அந்த அறிக்கையில் அவர் குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் தமிழக முதல்வர் மு. கருணாநிதி கருத்து வெளியிட்டுள்ளார்.

செல்வி ஜெயலலிதாவின் கருத்தைக் கேள்விப்பட்டு கொதித்துப் போனேன்; கொதித்துக் கொண்டிருக்கின்றேன்.

''தமிழ் மொழியைக் கட்டாயக் கல்வி மொழியாக்கினால் எந்த வகையில் ஹிந்தி புகுந்துவிடும் என்று கூறுகின்றார்.

''நாடாளுமன்றத்தில் ஹிந்தியில் பேசும் செல்வி ஜெயலலிதாவா தமிழ்மொழி வளர்ச்சிக்கு உதவப்போகின்றார்'' என்று கருணாநிதி காட்டமாகக் கருத்து வெளியிட்டுள்ளார்.

ஜெயலலிதாவின் கருத்தைக் கண்டித்து தமிழகமெங்கும் அவரின் கொடும்பாவியை எரிக்கும்போராட்டம் ஒன்றை முன்னெடுக்கப் போவதாக தலைநகர் தமிழ்ச் சங்கம் அறிவித்துள்ளது.

ஜெயலலிதாவின் கருத்தைப் பல அரசியல் வாதிகளும் அமைப்புக்களின் பிரமுகர்களும் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

(இ-3)

# செச்சினியாவில் யுத்தம் முடிவு;

# சிவில் நிர்வாகத்துக்கு ஏற்பாடு

## ரஷ்யப் படைகள் வாபஸ் பெறப்படுகின்றன

குறோஸ்னி, பெப். 24

செச்சினியாவின் பெரும் பகுதியைக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ள ரஷ்யப் படைகள் அங்கு சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தும் பொறுப்பை உள்நாட்டு அமைச்சிடம் ஒப்படைக்கும் பணியை ஆரம்பித்துள்ளன என்று ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

செச்சினியாவில் கடந்த ஐந்து மாதங்களாக இடம் பெற்ற யுத்தத்தின் காரணமாகப் பெரும்பகுதி நம்வசம் வந்துள்ளது என்றும் —

குறிப்பாக மலைப் பகுதியில் மட்டுமே சண்டை இடம்பெறுகின்றது என்றும் — அவர் மேலும் தெரிவித்தார்.

குறோஸ்னியில் நிலை கொண்டுள்ள படையணிகள் வாபஸ் பெறப்பட்டு வருகின்றன என்றும் —

நகரில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த வசதியாக நகரை உள்நாட்டு அமைச்சிடம் கையளிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் — அவர் சொன்னார்.

உலக அரங்கில்

நகரில் பொதுமக்கள் மீளக் குடியமர அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் —

விசேட அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் —

கண்ணிவெடிகளை அகற்றும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் — தெரிவிக்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை ரஷ்யப்படைகளின் ஹெலி ஒன்றைச் செச்சினியத் தீவிரவாதிகள் சுட்டு வீழ்த்திய சம்வத்தை அடுத்து ரஷ்யப் படைகளின் செயற்பாடுகள் மந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன என்று பி. பி. ஸி. கருத்து வெளியிட்டது.

# கிழக்குத்திமோர் அட்டூழியங்கள்: சூத்திரதாரிகள் மீது விசாரணை

ஜகார்த்தா, பெப். 24

கிழக்குத் திமோரில் இடம் பெற்ற தேர்தலில் மக்கள் சுதந்திரத்துக்கு ஆதரவாக வாக்களித்த பின்னர் அங்கு அட்டூழியங்கள் புரிந்தவர்கள் நீதிக்கு முன் நிறுத்தப்படுவர் என்று இந்தோனேசிய மனித வள அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பாலியல் வல்லுறவு, பொது மக்களைத் துன்புறுத்தல் போன்ற அட்டூழியங்களில் ஈடுபட்டமை குறித்து கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பாக மூன்று மாத காலம் விசாரணைகள் இடம் பெற்றன என்றும்—

இந்த விசாரணைகளின் போது அட்டூழியங்களுக்கான சூத்திரதாரிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர் என்றும் —

அவர்கள் விரைவில் நீதியின் முன் நிறுத்தப்படுவர் என்றும்— அவர் மேலும் தெரிவித்தார்.

பெரும்பாலானசம்பவங்கள் அமைதிக்கு அனுப்பப்பட்ட படையினராலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும்—

எக்காரணம் கொண்டும் அவர்கள் பாதுகாக்கப்படமாட்டார்கள் என்றும்—அவர் மேலும் சொன்னார்.

அதேசமயம்— அங்கு இடம் பெற்ற சம்பவங்கள் தொடர்பாக பதவி நீக்கப்பட்ட பாதுகாப்புத்துறை அமைச்சர் ஜெனரல் விராண்டோ நாடாளுமன்றத்தில் சாட்சியம் அளிக்க விருக்கின்றார்.

### பதற்றம் நிலவினாலும்

# காஷ்மீர்பிரச்சினை குறித்து பேச பாகிஸ்தான் தயார்

## வெளியுறவுச் செயலர் தெரிவிப்பு

இஸ்லாமாபாத், பெப். 24

பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகளில் பதற்ற நிலை நீடித்தாலும் சர்ச்சைக்குரிய காஷ்மீர்ப் பிரச்சினை குறித்து பேசத் தயாராக உள்ளோம்.

இவ்வாறு பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர் தெரிவித்துள்ளார்.

காஷ்மீரில் பாகிஸ்தான் ஆக்கிரமித்து வைத்துள்ள பகுதிகளை இந்தியாவிடம் பாகிஸ்தான் திரும்ப ஒப்படைத்தால் மட்டுமே பாகிஸ்தானுடனான பேச்சுக்கள் மற்றும் உடன்பாட்டுக்கு இந்தியா தயாராக இருப்பதாக இந்தியப் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் தெரிவித்திருந்தார்.

இதற்கு பதில் அளிக்கும் போதே பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை — இந்தியாவின் எந்த நடவடிக்கையையும் எதிர்கொள்ள பாகிஸ்தான் தயாராக இருக்கிறது எனவும் —

ஒருவேளை போர் மூளும் வாய்ப்புக்கள் ஏற்பட்டால் இந்தியா பயங்கர விளைவுகளைச் சந்திக்க வேண்டிவரும் எனவும் — பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் முஷாரப் இராணுவ அதிகாரிகள் மத்தியில் பேசும் போது கூறினார்.

(இ-க)

## பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பம்

லண்டன், பெப். 24

பிலிப்பைன்ஸ் அரசும் மொறோ இஸ்லாமிய விடுதலை முன்னணியினரும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இந்த மாதப் பிற்பகுதியிலோ அல்லது அடுத்த மாத முற்பகுதியிலே இப்பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

இரு தரப்பினருக்கும் இடையே பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுப் பின் தடைப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(இ-க)

## பாகிஸ்தானை விட்டு வெளியேறத் தடை

இஸ்லாமாபாத், பெப். 24

பாகிஸ்தான் அரசியல் வாதிகள் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு அந்த நாட்டு அரசு தடை விதித்துள்ளது.

ஊழல் ஒழிப்பு நடவடிக்கையின் ஒரு கட்டமாகவே இத்தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் ஆட்சிக் காலத்தில் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி ஊழல் மற்றும் பொருளாதார சுரண்டல் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் என்று சந்தேகிக்கப்படும் 115 க்கு மேற்பட்ட அரசியல் வாதிகளுக்கே இத்தடை உத்தரவு விதிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் பெனாசிர் பூட்டோ, நவாஸ் ஷெரீப் ஆகியோரும் இவர்களில் அடங்குவர்.

(இ-க)

## வேட்பாளர் உயிரிழப்பு

மணிப்பூர் மாநிலத் தேர்தல் வாக்களிப்பின் போது இடம்பெற்ற மோதல் சம்பவங்களில் வேட்பாளர் ஒருவர் உட்பட மூவர் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்களில் மூன்று படையினரும் அடங்குவர் எனக் கூறப்பட்டது.

மற்றொரு மோதல் சம்பவத்தில் சிக்கி பெண் ஒருவர் கொல்லப்பட்டார்.

(இ-3)

## உத்தரவு

இஸ்லாமாபாத், பெப். 24

முன்னாள் செச்சினிய குடியரசுத் தலைவர் ஜெலிம்கான் வியான்ரப் பகவை நாட்டை விட்டு வெளியேறுமாறு பாகிஸ்தான் உத்தரவிட்டுள்ளது.

நோய்வாய்ப்பட்ட நிலையில் இருந்த ஜெலிம்கான் பாகிஸ்தானில் தங்கியிருந்தார். அவருக்கு அளிக்கப்பட்ட நோய்ரிமைக்காலம் முடிவடைந்து விட்டது எனவும் எனவே அவர் பாகிஸ்தானை விட்டு வெளியேறிவிடவேண்டும் எனவும்பாகிஸ்தான் உத்தரவிட்டுள்ளது.

(க)

## மொஸாம்பிக்கில் சூறாவளி அபாயம்

மபுடோ, பெப் 24

மொஸாம்பிக் நாட்டில் 'இலீன்' என்ற சூறாவளி வீசப் போவதாகவும் இச் சூறாவளி மொஸாம்பிக்கின் கடற்கரைப் பகுதியைநோக்கி நகர்ந்து வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சக்தி வாய்ந்த இச் சூறாவளி எதிர்வரும செவ்வாய் அன்று மொஸாம்பிக் நாட்டின் பெரும் நிலப்பகுதியைத் தாக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(க)




# ஏப்ரலில் சர்வதேச கிரிக்கெட் வாரம்

## ஐ. நா. சபையின் ஒத்துழைப்புடன்

கொழும்பு, பெப். 24

கிரிக்கெட் விளையாட்டை அபிவிருத்தி செய்யவும், அதன் செயற்பாடுகளை உலகளாவிய ரீதியில் பரப்பவும் சர்வதேசக் கிரிக்கெட் சங்கம் எதிர்வரும் ஏப்ரல் 2 முதல் 9 வரையான காலத்தைச் சர்வதேசக் கிரிக்கெட் வாரமாகப் பிரகடனப்படுத்தி உள்ளது.

இந்தத் திட்டத்தை விஸ்தரிப்பதற்குச் சர்வதேசக் கிரிக்கெட் சங்கத்துக்கு ஐக்கிய நாடுகள் சபை தனது பூரண ஒத்துழைப்பை வழங்க முன்வந்துள்ளது.

இந்தத் திட்டத்துக்கு அமைய கிரிக்கெட் வாரத்தின்போது —

முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் கிரிக்கெட் தூதுவர்களாக நியமிக்கப்பட்டு அவர்கள் பல்வேறு நாடுகளுக்குச் சென்று தாம் பெற்ற அனுபவங்களின் மூலம் கிரிக்கெட் துறையை விஸ்தரிக்க உதவுவர்.

இதைவிட, கிரிக்கெட்டின் வரலாறு, உலகின் ஒவ்வோர் பிராந்தியத்திலும் கிரிக்கெட் துறையின் வளர்ச்சி. இளம் கிரிக்கெட் நட்சத்திரங்கள், தற்காலத்தில் சிறந்த கிரிக்கெட் வீரர்கள், பெயர் பெற்ற முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் என்பனவும் கிரிக்கெட் வாரத்துடன் தொடர்புடையவையாக அமையும்.

கிரிக்கெட் வாரத்தின் போது இடம்பெற உள்ள முக்கிய நிகழ்வாக ஆசியக் கிரிக்கெட் அணிக்கும் எஞ்சிய உலக நாடுகள் கிரிக்கெட் அணிக்கும் இடையில் ஏப்ரல் 8 இல் பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் கிரிக்கெட் போட்டி இடம்பெறும்.

இதைவிடக் கிரிக்கெட் வாரத்தின்போது டென்மார்க், ஒல்லாந்து, அயர்லாந்து, கென்யா, ஸ்கொட்லாந்து. ஸிம்பாப்வே 'ஏ' அணிகளுக்கு இடையில் ஹராரேயில் 15 கிரிக்கெட் போட்டிகள் இடம்பெறும்.

இந்தப் போட்டிகள் அனைத்தையும் உலகின் பல பாகங்களுக்கும் ஒளிபரப்புவதற்கு ட்ரான்ஸ் வேல்ட் இன்ரர்நஷனல் நிறுவனம் நடவடிக்கைகள் எடுத்துள்ளதாகவும்—

இதன் மூலம் கிரிக்கெட் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தச் சர்வதேசக் கிரிக்கெட் சங்கத்துடன் ஒத்துழைப்பதாகவும் — சங்கத்தின் தலைவர் ஜெகமோகன் டால்மியா தெரிவித்தார்.

(இ-8)

### வேகப்பந்து வீச்சாளர்கள்

## சாதனைகள் படைக்க இந்தியக் களங்கள் உதவா!

### அலன் டொனால்ட்

புதுடில்லி, பெப். 24

பந்து வீச்சில் நான் சாதனை படைப்பதற்கு இந்திய ஆடுகளங்கள் உதவமாட்டா.

இவ்வாறு தென்ஆபிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சாளர் அலன் டொனால்ட் தெரிவித்துள்ளார்.

டெஸ்ட் போட்டிகளில் 290 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய இவர் இந்திய அணியுடன் நடைபெற உள்ள இரண்டு டெஸ்ட் போட்டிகளில் 10 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினால் கிரிக்கெட் உலகில் டெஸ்ட் போட்டிகளில் முன்னூறு விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய 13 வீரர்களின் பட்டியலில் 14 ஆவது ஆளாக இடம்பெறுவார்.

இந்திய ஆடுகளங்கள் துடுப்பாட்ட வீரர்களுக்குச் சாதகமாகவே அமைக்கப்பட்டுள்ளன. இதில் வேகப்பந்து வீச்சாளர்கள் தமது திறமையை வெளிக்காட்டுவது கடினமே. இங்கு பந்து வீசுவது வேகப்பந்து வீச்சாளர்களுக்கு சிறந்த கற்கை அனுபவங்களைப் பெற்றுத்தரும். வேகப்பந்து வீச்சாளர்கள் தமது பந்து வீச்சில் புதிய உத்திகளைக் கற்பதற்கு இந்தியக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் இன்றியமையாதது என நான் கருதுகிறேன் என மேலும் டொனால்ட் கூறினார்.

(-8)

### காயம் காரணமாக

## முதலாவது டெஸ்டில் அஸாருதீன் இல்லை!

புதுடில்லி, பெப். 24

இந்திய — தென் ஆபிரிக்க அணிகளுக்கு இடையில் இடம்பெற உள்ள ஒருநாள் டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த முஹம்மட் அஸாருதீன் சுட்டை விரலில் ஏற்பட்ட எலும்பு முறிவு காரணமாக இந்திய அணியில் விளையாடமாட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்ஆபிரிக்க — இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அணிகளுக்கு இடையில் கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்ற பயிற்சி ஆட்டத்தில் 9 ஓட்டங்களுடன் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த வேளையே அஸாருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டதாகத் தெரிகிறது.

அஸாருக்குப் பதிலாக இந்திய — தென்ஆபிரிக்க டெஸ்ட் போட்டிகளில் அஜய் ஜடேஜா பங்குபற்றுவார் எனவும்—

அஸாருக்கு ஏற்பட்டுள்ள காயம் காரணமாக, அவர் அணியில் இடம்பெறுவது தொடர்பாக ஒரு வாரத்தின் பின்னரே எதுவும் கூறமுடியும் எனவும் — இந்திய அணித் தெரிவுக் குழுத்தலைவர் தெரிவித்தார்.

(இ-8)

### மத்தியஸ்தர் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 24

யாழ். மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான கலந்துரையாடலும் புதிய மத்தியஸ்தர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான வகுப்பும் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களையும் புதிதாகச் சேர விரும்புவோரையும் சமுகமளிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

(பி-8)

# யாழ். பிரதேச செயலகத்துக்கு விரைவில் நிரந்தரக் கட்டடம்

யாழ். பிரதேச செயலகத்துக்கு நிரந்தரக் கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பிரதேச செயலகத்துக்கு தனியான கட்டடம் ஒன்று இல்லாத காரணத்தால் பொதுமக்களுக்கான சேவைகளை ஒரே இடத்தில் வைத்து செய்ய முடியாதநிலை நிலவுகின்றது என்றும் —

இதன் காரணமாக நிரந்தரக் கட்டடம் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் — தெரிவிக்கப்பட்டது.

எதிர்காலத்தில் பொதுமக்களுக்கு வசதியானசேவையை வழங்க நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கு பொதுப் போக்குவரத்துச் சூழல் நிறைந்த பகுதியில் காணியை அன்பளிப்பாக வழங்கி உதவுமாறு யாழ். பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

(இ-3)

### கப்பலில் தபால் பொதிகள்

காங்கேசன்துறைக்கு வந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் கொண்ட 99 பொதிகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

இதேகப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட தபால்கள் கொண்ட 45 பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டதாக தபால் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்,

(க-10)

### இல்ல மெய்வல்லுநர் போட்டிகள்

தென்மராட்சி, பெப். 24

பளை வேம்பொடுகேணி சி. சி. த. க. பாடசாலை இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று வியாழக்கிழமைமாலை 3. மணிக்குப் பாடசாலை மைதானத்தில் அதிபர் சி. இராமலிங்கம் தலைமையில் நடைபெறும்.

போட்டிக்கு முதன்மை விருந்தினராகத் தென்மராட்சிக் கல்வி வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் இ கணேசன் கலந்து கொள்வார்.

(க-117)

### உயிர் காக்க உதவுங்கள்



செல்வி பபிகலா சுந்தரலிங்கம் இருதய நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார். இவரது இருதயத்தில் ஏற்பட்டுள்ள துவாரத்துக்கு சத்திர சிகிச்சை செய்யப்படவுள்ளது. கொழும்பு நவலோக வைத்தியசாலையில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள சத்திர சிகிச்சைக்கு பெருந்தொகைப் பணம் தேவைப்படுகிறது. அவரது குடும்ப நிலைமை அதற்கு வாய்ப்பானதாக இல்லை.

காரைநகரைப் பிறப்பிடமாகவும் நாரந்தனையை வசிப்பிடமாகவும் கொண்ட உடுவில் மகளிர் கல்லூரி மாணவியான பபிகலாவின் உயிரைக் காப்பாற்றும் பொருட்டு கொக்குவில் லயன்ஸ் கழகம் உதவி நிதி ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இதற்கான பணத்தைப் பெறுவதற்கானஉங்கள் உதவியையும் கழகம் நாடி நிற்கின்றது.

கருணை உள்ளம் கொண்ட அனைவரையும் அவர்களால் இயன்ற தொகையை, யாழ். ஆஸ்பத்திரி வீதி, இலங்கை வங்கிக் கிளையில், இதற்கெனத் தொடங்கப்பட்டுள்ள 46175 கணக்கு இலக்கத்திற்குச் செலுத்தியுதவுமாறு கழகம் கேட்டுள்ளது.

உங்கள் பிள்ளைகளில் ஒருவராகக் கருதி இந்த மாணவியின் உயிரைக் காப்பாற்ற உதவுங்கள்.

# குடாநாட்டுபுனர்வாழ்வுப்பணிகளுக்கு இவ்வருடம் ரூ. 30 கோடி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், பெப். 24

குடாநாட்டில் புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்ள இந்த வருடத்துக்கு 30 கோடி ரூபாவை வடமாகாண மீள் குடியமர்வு புனர்வாழ்வு அதிகாரசபை ஒதுக்கீடு செய்துள்ளது.

இது தொடர்பான அறிவித்தலை அதிகாரசபையாழ். செயலகத்துக்கு அனுப்பியுள்ளது.

மீள்குடியமர்வுக் கொடுப்பனவுக்காக மூன்று கோடியே 30 லட்சம் ரூபாவும் —

நிரந்தர வீடமைப்புத் திட்டத்துக்கென 13 கோடியே 70 லட்சம் ரூபாவும் —

காயமடைந்தோர், உயிரிழந்தோர் ஆகியோருக்கான நஷ்டஈட்டுக் கொடுப்பனவை வழங்க நான்கு கோடி ரூபாவும் —

கைத்தொழில் நிறுவனங்களின் இழப்பீட்டுக் கொடுப்பனவு வழங்க 50 லட்சம் ரூபாவும் —

கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களைப் பூர்த்தி செய்ய ஐந்து கோடி 50 லட்சம் ரூபாவும் —

இந்தவருடத்தில் புதிய திட்டங்களை மேற்கொள்ள மூன்று கோடி ரூபாவும் — ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளன.

இந்த ஒதுக்கீடு படிப்படியாக யாழ். செயலகத்துக்கு அனுப்பப்படவிருக்கின்றது.

### திறப்பு விழா

தெல்லிப்பழை வாலிபர் ஐக்கிய சங்க சனசமூக நிலையத்துக்கான புதிய கட்டடத் திறப்புவிழா இன்று வியாழன் முற்பகல் 11. 30 மணிக்கு சங்கானை, ஓடக்கரையில் தலைவர் பூ. ஐபாத்துரை தலைமையில் இடம் பெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. வி. கிருஷ்ணசாமி கலந்து கொள்ளவுள்ளார் (இ-10-90)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 14 — 01 — 1977

ஆண்டவன் அடியில் 07 — 03 — 1999

### அமரர் நடேசு ஜெகநாதன்

(முருகையன் கோயிலடி, துன்னாலை வடக்கு.)

ஒவ்வொரு நிமிடமும் மறக்கவே முடியாத உன்
ஞாபகங்கள் உன்னையே நினைவூட்டுகின்றன.
ஓடிவந்து எங்களுடன் உற்ற கதை சொன்ன..
உற்றமொழி ஓராண்டு காலம் சென்றாலும்
.மறக்கமாட்டோம்; மறக்கவும் முடியாதப்பா.
வாடாத மலராய், வற்றாத நீராய்
அன்பு ஊற்றாய் நீர் இருக்க
ஆண்டவனை நினைந்துருகிக் கேட்கும்...

அன்புத் தந்தை, தாய், சகோதர சகோதரிகள், சித்தப்பா, சித்திமார், மச்சான்மார், மருமக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

பொ. நடேசு,
முருகையன் கோயிலடி,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

(சி/11155)

# அன்பெனும் வாழும் அறத்தை வலியுறுத்தும் நல்லறிவு செறிந்த மணிமொழித் தொகுதி

## திருக்குறள் வழிநின்று ஒற்றுமையை வளர்ப்போம்

திருக்குறள் ஒரு தத்துவ நூல்; வாழ்வியல் நூல்; தகுதி வாய்ந்த நூல். திருவள்ளுவர் தலை சிறந்த அறிவியல் பார்வை உடையவராகவும் விளங்கினார். தமிழரின் சிந்தனை வளத்துக்குப் பெருமை சேர்க்கும் விதத்தில் திருவள்ளுவரின் திருக்குறள் இன்றும் சிறந்து விளங்குகிறது.

ஐரோப்பியப் பாதிரிமார்கள் தம் சமயத்தைப் பரப்பத் தமிழைக் கற்றார்கள். அதன் வழி தமிழ் மொழி இலக்கியம் பண்பாட்டால் ஈர்க்கப்பட்டனர். அதனால் அவர்கள் தமிழுக்குத் தந்த புதிய பார்வைகள் பல.

திருவள்ளுவர் தமிழ் பண்பாட்டின் பிழிவாக, தம் முன்னையோர் கருத்துக்களையும் உளங்கொண்டு திருக்குறளைப் படைத்துள்ளார் என்று பேரறிஞர் சுவைட்சர் இந்திய மெய்யியல் சிந்தனைகள் பற்றிய தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

வைதிகம் முதலிய மதங்களில் காணப்படும் உலகையும் வாழ்வையும் வெறுப்போடு பார்க்கும் கருத்து வள்ளுவரிடம் காணப்படவில்லை. அவற்றை விருப்போடு பார்க்கும் பார்வையே 99 சதவீதம் காணப்படுகிறது.

குல தருமத்தை வற்புறுத்தும் பகவத் கீதை மற்றும்



இன்று திருவள்ளுவர் திருநாள்

மனுநீதி போல் அல்லாமல் எல்லோர்க்கும் பொதுப்பட அறம் சொல்லும் வள்ளுவம் பாராட்டுக்குரியது என்றும் சுவைட்சர் குறிப்பிடுகிறார். உள்நோக்கிய ஒழுக்கத்தோடு திருக்குறளில் அன்பெனும் வாழும் அறம் வலியுறுத்தப்படுகிறது. திருக்குறளின் வாழ்வு ஏற்புக்கொள்கை எல்லோருக்கும் ஏற்புடையது ஒன்று தான்.

மனித மனத்தின் பல்வேறு நிலைகளையும் ஏற்ற ஓர் இலட்சிய வாதத்தைத்தான் வள்ளுவர் காட்டுகிறார். திருக்குறள் சமயச் சார்பற்ற ஒழுக்க நெறியின் வெளிப்பாடாக விளங்குகிறது. கீதையில் கடவுள் மனிதனோடு பேசுகிறார். திருக்குறளில் மனிதன் மனிதரோடு பேசுகிறார்.

அல்பேர்ட் சுவைட்சர் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு ஆபிரிக்காவில் சேவை செய்கையிலே தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் தமிழ் மக்கள் எப்படித் திருவள்ளுவரை வணங்குகிறார்கள் என்று அறிய விருப்பமுள்ளவராக இருந்தார். ஆனால் அவர் உடல்நிலை சரியாக இல்லாததால் அவரது விருப்பம் நிறைவேறாமல் போய்விட்டது. அவர் செய்த சேவைக்கு மகுடம் வைத்தாற்போல் அவருக்கு அமைதிக்கான நோபல்பரிசு வழங்கப்பட்டது.

வள்ளுவப் பெருந்தகை தமக்குரிய திருக்குறளில் காணப்படும் வாழ்க்கைச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற ஆனந்தத்தை வெளியிடுகின்ற மணிமொழி வாசகங்கள் திருக்குறளில் உலக வாழ்வு, இசைவுக்கொள்கைஎத்துணை வலுவாக இடம் பெற்றுள்ளது என்பதற்குச் சான்றாக ஒலிக்கின்றன.

இத்துணை உயர்ந்த நல்லறிவு செறிந்த மணிமொழித் தொகுதி உலகத்தில் உள்ள இலக்கியங்களில் வெறெதனிலும் இல்லை என்று கூறுகிறார். திருக்குறள் என்னும் மாமருந்து எங்களிடையே ஒற்றுமையையும் மனித நேயத்தையும் வளர்த்து சமாதானத்தை நோக்கி முன்னேறிச் செல்ல உறுதி எடுப்போமாக. ★

**ஏ.என்.யோகநாதன்**
(தெய்வீக திருக்குறள் இளைஞர் மன்றம்)

# இனப்பாகுபாடு இங்கு இருக்கும் வரைக்கும் மனித உரிமை பேணுதலில் முன்னேற்றம் இராது

## கருத்தரங்கில் வண. பிதா பேனார்ட்

யாழ்ப்பாணம், பெப். 24

இனரீதியில் பாகுபாடிருக்கும் வரை இலங்கையில் மனித உரிமைகளின் தற்போதைய நிலை முன்னேற்றமடையும் என்று கூற முடியாது.

நீதி சமாதான ஆணைக்குழுவின் தலைவரும் புனித பத்திரிசியார் கல்லூரி அதிபருமான வண. பிதா அ. இ. பேனார்ட் இவ்வாறு கூறினார்.

யாழ். பல்கலைக்கழக சமூகவியல் சமூகம் நடத்திய கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைச் சொன்னார்.

கருத்தரங்கு, சமூகவியல் சமூகத் தலைவர் ம. பிரதீபன் தலைமையில் பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. "மனித உரிமைகள் பிரகடனமும் இலங்கையில் மனித உரிமைகளும்" என்ற தலைப்பில் உரையாற்றிய வண. பிதா பேனார்ட் மேலும் கூறியதாவது:

சகலரும் சமமான மனித மாண்புடையர் என்று ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கு வளர்க்கப்பட வேண்டும். மனித உரிமைகளைப் பேணிக் காப்பதில் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும்.

மத வழிபாட்டுத்தலங்கள் சமூக அமைப்புகள், கல்வி நிலையங்கள் இப்பணிக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

யாழ். பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரையில் மனித உரிமைகள் அலகு ஒன்றை ஆரம்பித்து இவ்விடயம் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும்.

பல ஆண்டுகளாக இலங்கையின் மனித உரிமை பேணுவது சம்பந்தமான நிலை வெட்கத்திற்குரியதாகவே இருந்து வருகிறது.

கிளர்ச்சியாளர்கள், அகில உலக மனித உரிமைகள் பிரகடனம் கூறுவது போல– கொடுமைக்கும் அடக்குமுறைக்கும் எதிராக கடைசித் தஞ்சமாக கிளர்ச்சி செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டனரோ என்ற ஐயம் எழுகின்றது.

அவசர காலச்சட்டம், பயங்கரவாதத் தடைச்சட்டம் என்பவற்றின் 'வரையறைகள்' என்ற போர்வையில் அரச படையினரின் அத்துமீறல்களை நோக்கும் போது அச்சட்டங்கள் பயங்கரவாதத்தைத்தடை செய்கின்றனவா? வளர்க்கின்றனவா? என்ற கேள்வியும் எழத்தான் செய்கிறது.

கடந்த சில வருடங்களாக இலங்கையின் தமிழ்ப் பிரதேசங்களிலே விமானத்தாக்குதல், ஷெல் தாக்குதல்போன்) வற்றினால் ஏற்பட்ட உயிரிழப்பு அங்கவீனம், பொருள் அழிவுஆகியவற்றின் சுமையை மக்கள் இன்னும் சுமந்து கொண்டுள்ளனர்.

யாழ்.மக்களைப் பொறுத்தவரையில் 1996 ஆம் ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து நடைபெற்று வரும் மனித உரிமை மீறல்களின் தாக்கம் மிக அதிகமானது. எதேச்சையாக கைது செய்தல், சட்டத்திற்குப் புறம்பாக கொலை செய்தல், காணாமற் போதல், கற்பழிப்பு, சித்திரவதை, அநீதியான முறையில் தடுத்து வைத்தல், சட்டத்துக்கு முன் சகலரும் சமம் என்பது அலட்சியம் செய்யப்படுதல், நீதி விசாரணை நடத்துவதற்கு மறுப்பு, தடுப்பு முகாம்களிலும் சோதனைச் சாவடிகளிலும் கேவலமான முறையில் நடத்தப்படுதல், நடமாடுவதற்கு, வதிவிடத்தை தெரிவு செய்வதற்கு, தொழிலில் ஈடுபடுவதற்கு, ஒன்று கூடுவதற்கு, கருத்து வெளியிடுவதற்கு தடைகள் போன்ற பலவித கொடும் நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. இப்படி அவர் கூறினார்.

யாழ். பல்கலைக்கழக அரசறிவியல் சமூகவியல்துறைத் தலைவர் கலாநிதி என். சண்முகலிங்கன் தமது தொடக்க உரையில் கூறியதாவது:-

மனிதர்களிடையே நிறங்கள், இனங்கள் இருக்கலாம் ஆனால் மனித உரிமையில் இனங்கள் இருக்க முடியாது. அனைத்துத் தளைகளிலிருந்தும் அனைவருக்கும் விடுதலை என்பதே மனித உரிமையின் மூச்சாகும்.

எங்கு பார்த்தாலும் மனித உரிமை என்ற பேச்சுண்டு ஆனால் நடைமுறையில் வித்தியாசம் இருக்கிறது. மனித உரிமைகள் தொடர்பான

(8 ஆம் பக்கம் பார்க்க)

# உதயன்

## கோப்பாயில் கல்விக் கல்லூரி

கடந்த சில வருடங்களாக எதிர்பார்க்கப்பட்ட யாழ்ப்பாண தேசியக் கல்விக்கல்லூரி அடுத்த மாதம் இயங்கத் தொடங்கும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் பணி சிறப்பாக நடைபெற இந்நடவடிக்கை பெரிதும் உதவும்.

ஒரு பிரதேசத்தின் கல்வி வளர்ச்சி அடைவதற்கு, ஆசிரியர்களின் பங்கும் பணியும் முதுகெலும்பு போன்றவை. இளம் சந்ததியினர்களின் ஆற்றல்களை இனங்கண்டு, அவர்களை ஆற்றுப்படுத்தி, அறிவும் ஒழுக்கமும் போதிக்கும் பெரும் பொறுப்பு ஆசிரியர்களைச் சார்ந்தது. அவர்கள் சமூகச் சிற்பிகள்.

ஆசிரியர் தொழிலை எல்லோரும் செய்துவிட முடியாது. மாணவர்களின் எதிர்கால நலனில் அக்கறை கொண்டு அர்ப்பணிப்புடன் பணிபுரியும் ஒருவனே நல்லாசிரியனாக இயலும். கல்வியைப் போதிப்பதற்கு அதற்கான நுட்பங்களும் பயிற்சியும் அவசியம். மாணவர்களின் திறமையையும் உளப்பாங்கையும் இனங்கண்டு கல்வி போதிப்பதற்கு அதற்கான சிறப்பான ஆற்றல் தேவை.

ஆசிரியர் ஒருவரின் மூலம் மாணவர்களின் கல்வி அறிவு கூர்மை பெற வேண்டுமாயின் ஆசிரியர் உரிய பயிற்சி பெறுவது இன்றியமையாததாகும். அதன் பொருட்டு ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் கலாசாலைகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் அவசியம்.

உலகின் ஏனைய பல நாடுகளில், ஆசிரியர் பயிற்சியும் பட்டறிவும் உள்ளவர்களே வகுப்பறைகளுக்குள் காலடி எடுத்து வைக்க முடியும். ஆனால் இங்கு அவ்வாறில்லை. அரசியல் ஆதரவு கருதி முதலில் ஆசிரியர் நியமனங்களை வழங்கி, பாடசாலைகளில் சேவையாற்ற அனுமதித்த பின்னரே பயிற்சிக்கு அனுப்புகிறார்கள். இதனால் கல்விப் போதனைத் தொழில் நுட்பம் அறவே தெரியாதவர்கள் பாலர்களுக்குக் கூட கல்வி போதிக்கும் பாதிப்பான நிலையும் தோன்றுகிறது.

ஆசிரியர்கள் எல்லோரும் இத்தனையாம் ஆண்டுக்குள் பயிற்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்ற இலக்கு ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. அதே போல, ஆசிரியர்களாகப் பணிபுரிய இருப்பவர்களுக்கு முற் கொண்டே பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

அந்த நல்ல திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டவையே கல்விக் கல்லூரிகள். இத்தகைய ஒரு கல்லூரி யாழ்ப்பாணத்தில் இது வரை நிறுவப்படாமை பெருங்குறையாக இருந்தது. அதனை எங்கே அமைப்பது என்பதில் வழமையான இழுபறிகள் நிலவியதும் தெரிந்ததே.

மேலும் காத்திருக்காமல் கல்விக் கல்லூரியை கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் ஒரு பகுதியில் இயக்கத் தீர்மானித்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்கதாகும். குடாநாட்டில் முன்னர் ஐந்து ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள் இயங்கின. ஆனால் இப்போது இரண்டு மட்டுமே உள்ளன. புதிய கல்விக் கல்லூரியும் சேர்ந்தால் மூன்றாகும். எனினும் குடாநாட்டின் தேவையை நிறைவேற்ற மேலும் ஒன்றாவது தேவை.

மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஆசிரியர்களின் பயிற்சியே ஆதாரம் என்பதனைக் கருத்திற் கொண்டு, கல்வித் திட்டமிடலில் முன்னுரிமை தரப்பட வேண்டும்.

## நாளை

மாசி 13

வெள்ளிக்கிழமை

திதி: ஷஷ்டி

முன்னிரவு 9.32 வரை.

நட்சத்திரம்: சுவாதி

பிற்பகல் 12.48 வரை.

சுபநேரம்: 6.30—8.00

ராகுகாலம்: 11.00—12.30

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதய வாக்கு

குழந்தையும் மலரும் செழிப்புள்ளவை; அவற்றை மென்மையாகக் கையாள வேண்டும்.

- நேரு

## சாயி சிந்தனை

நாம் காற்றைச் சுவாசிக்கிறோம். உள்ளிழுத்த காற்றை வெளிவிடுகிறோம். இல்லையெனில் நுரையீரல் கெட்டுப்போகும். நாம் உணவு உண்கிறோம். அதையும் ஜீரணம் செய்து வெளியே அனுப்பி விடுகிறோம். இல்லையெனில் வயிறு கெட்டுப்போகும். அதைப்போலத் தான் பணமும் சரியான முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். அதில்தான் மகிழ்ச்சியான— ஆரோக்கியமான வாழ்க்கை அடங்கியிருக்கிறது. பணம் சேர்த்துக் கொண்டே போனால் அது கடைசியில் மன அழுத்தத்தில் கொண்டுவிடுகிறது. 90 சதவீத மக்களுக்கு இத்தகைய மன அழுத்தம் இருக்கிறது. இவ்வாறான மன அழுத்தத்திற்கு நாம் இடமளிக்கக் கூடாது.

நம் எண்ணங்களே இத்தகைய மன அழுத்தங்களுக்குக் காரணம். நம் எண்ணங்களை தூய்மைப்படுத்துகையில் ஏமாற்றங்கள் விளைவுகளாக வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அதற்கு முதலில் நாம் ஆரோக்கியமாக இருக்கவேண்டும். நீண்ட காலம் வாழுங்கள். உடல் நலத்துடன் வாழுங்கள் பிறருக்கு எடுத்துக் காட்டாக வாழுங்கள். நம் வாழ்க்கை ஆதர்சமானதாக விளங்கவேண்டும். மற்றவர்களும் நல்ல வழியில் வாழ்க்கை அமைத்துக்கொள்ளும் வகையில் சாதாரணமான வாழ்க்கை வாழவேண்டும்.

(ஆதாரம்: சனாதனசாரதி)

# புற்றுநோய் சிகிச்சை நிலையம்; புனரமைப்புப் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப். 24

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையுடன் இணைந்து அமைந்துள்ள புற்றுநோய் சிகிச்சை நிலையத்தைப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சிகிச்சை நிலையச் சுற்றாடலில் உள்ள பற்றைகளை வெட்டி அழிக்கும் பணிகள் தற்சமயம் நடைபெற்று வருகின்றன என்றும் —

அந்த நிலையத்தின் கூரைகளைத் திருத்தும் பணிகளை கட்டடத் திணைக்களம் ஒரு சில தினங்களில் ஆரம்பிக்கவுள்ளது என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சிகிச்சை நிலையத்தில் உள்ள கோபால் யூனிட்டின் கதிர்வீச்சுக் கருவி மட்டும் பழுதடைந்துள்ளது என்றும் —

அந்தக் கருவி பொருத்தப்பட்டதும் கோபால்யூனிட்டை இயக்க முடியும் என்றும் — சொல்லப்பட்டது.

அதேநேரம்–இந்த சிகிச்சை நிலையத்துக்குத் தேவையான அதிநவீன இயந்திரங்களைப் பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்துக்கு முன்பாக உள்ள வீதி வழியாகவே இந்தச் சிகிச்சை நிலையத்துக்கும் பொதுமக்கள் அனுமதிக்கப்படவிருப்பதால் அந்த வீதியைப் புனரமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(இ-3)

## சின்னஞ்சிறு விளம்பரம்


### தவறிவிட்டது

துன்னாலை கரவெட்டியில் வதியும் அ. பிரேமச்சந்திர குருக்கள் ஆகிய எனது மோட்டார் சைக்கிளின் உரிமங்கள் (500–5577) நெல்லியடிக்கும்–கோப்பாய்ச் சந்திக்கும் இடையில் பருத்தித்துறை வீதியில் கடந்த 21-02-2000 அன்று தவறிவிட்டன. இதனைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்படி முகவரியில் அல்லது 'உதயகிரி' கோப்பாய் வடக்கில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

(73910)

### மணமகள் தேவை

45 வயது ஆயிலிய நட்சத்திரம் யாழ்ப்பாணத்தில் பிறந்த மாதம் 5000/- வுக்கு குறையாத அரசாங்க வருமானமுள்ள இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த நற்பண்புகளுள்ள ஒருவருக்கு அழகான உடற்தோற்றம் உடைய மணமகள் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். க. திலகராஜா 36/11, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, சுண்டுக்குளி.

(73924)

### க.பொ.த. (உ/த)பரீட்சை

க.பொ.த (உ/த) பரீட்சை தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான விண்ணப்பப்படிவம் விற்பனையாகிறது. பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(சி/11132)

### விற்பனைக்கு

சனி, ஞாயிறு தினங்களில் நல்ல இன பூங்கன்றுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S. பாக்கியநாதன், 152/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

(73917)

### இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழிகள் உடன் தேவை. நல்ல விலை கொடுக்கப்படும். தொடர்பு:- தன பாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர்.

(73877)



## லயன்ஸ் கழகம்
### மானிப்பாய் வட்டம்

நடத்தும்

### இலவச பொது மருத்துவ/ கண்பார்வை பரிசோதனை முகாம்

இடம்: இணுவில் மத்திய கல்லூரி
கே. கே. எஸ். வீதி, இணுவில்.

காலம்: 27-02-2000 ஞாயிறு காலை 9 மணி முதல்

மருத்துவக்குழு

Dr. K. இரத்தினசிங்கம் Dr. M. பஞ்சலிங்கம்
Dr. S. பரமநாதன் Dr. C. அருமைத்துரை
Mr. S. யோகேஸ்வரன் M. L. T.

இரத்த அழுத்தம், சருமவியாதி, மலேரியா மற்றும் பொது மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும். வசதி குறைந்தோருக்கு மட்டும் இலவசமாக மருந்துகள் வழங்கப்படும்.

நீரிழிவுப் பரிசோதனை மேற்கொள்ள விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

**கண் பார்வை பரிசோதனை மேற்கொள்பவர்கள்.**

யாழ். பிரபல S. M. பெர்னாண்டோ ஸ்தாபனத்தினர்.

வசதி குறைந்தவர்களுக்குரிய மூக்குக் கண்ணாடிகள்பிறிதொரு தினத்தில் வழங்கப்படும்.

குறிப்பு:- ஸ்தாபிக்க இருக்கும் இணுவில் லயன்ஸ் கழகத்தில் இணைந்த, இணையவுள்ள பிரமுகர்களை அன்று காலை 10–30 மணிக்கு நடைபெறவுள்ள கலந்துரையாடலிலும் பங்குபற்றும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

லயன் S. S. தங்கராஜா, சேவை இணைப்பாளர்
லயன் Dr. உ.ரேரமகேஸ்வரன், கழகத் தலைவர்

சேவை பிரசுர உதவி:
**கணேசன் சென்ரர்**
தாவடி வடக்கு,
கொக்குவில்.
(சி-11153)


## இனப்பாகுபாடு...

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செயற்பாடுகளில் சர்வதேச அமைப்புக்களிலிருந்து உள்ளூர், பிராந்திய மட்ட அமைப்புக்கள் வரை ஈடுபடுகின்ற போதிலும் இவற்றிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன — என்றார்.

இக் கருத்தரங்கிற்கு தலைமை வகித்த சமூகவியல் சமூகத்தலைவர் ம. பிரதீபன் தமது தலைமை உரையில் தெரிவித்ததாவது:—

மனித வாழ்க்கையில் வாழ்வியல் மகிழ்ச்சிக்கும் ஒருமைப்பாட்டிற்கும் திருப்திக்கும் உரிமைகள் மிக இன்றியமையாதவையாகின்றன.

இன்றைய உலகின் நடைமுறைப் போக்கில் மனித உரிமைகள், ஜனநாயகம், சகோதரத்துவம் போன்ற கருத்துகள் முதன்மை பெறுகின்றன.

உலகில் நீதி, சமாதானம் சமத்துவம் என்பன நிலைபெற வேண்டுமானால் மனித சமுதாயத்தின் சகல அங்கத்தவர்களினதும் உள்ளார்ந்த கௌரவம் அங்கீகரிக்கப்படுவது அவசியமாகின்றது — என்று சொன்னார். (அ-5)

# ஓய்வூதியக் கணிப்புப் பிரிவு பன்முகப்படுத்தப்படும்

யாழ்ப்பாணம், பெப். 24

குடாநாட்டில் பணி புரியும் அரச ஊழியர்களின் ஓய்வூதியம் கணிப்பிடும் பிரிவு பிரதேச செயலகங்களுக்கு பன்முகப்படுத்தப்படவிருக்கின்றன.

இந்தப்பணியை பிரதேச செயலகங்களில் வைத்து மேற்கொள்ள வசதியாக பிரதேச செயலகங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு பயிற்சி வழங்கப்படவிருக்கின்றது.

இந்த வகையிலான பயிற்சி வகுப்பு எதிர்வரும் 28 ஆம், 29 ஆம் திகதிகளில் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற இருக்கின்றது.

விதவை ஓய்வூதியம், குடிசார் ஓய்வூதியத் திருத்தம் ஆகியன தொடர்பான கணிப்பு முறைகள் இந்தப் பயிற்சி வகுப்பில் விளக்கப்படவுள்ளன.

[இ-3]

# ம.எண்ணெய் விற்பனை

சண்டிலிப்பாய் பெப். 24

மானிப்பாய் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மண்ணெண்ணெய் விற்பனை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதனால் பாவனையாளர்களுக்கு கட்டுப்பாட்டு விலையில் மண்ணெண்ணெய் பெறுவதற்கு வசதி ஏற்பட்டுள்ளது.

(இ-135)


## EDNA வழங்கும் மற்றுமோர் அரியவாய்ப்பு

EDNA சொக்கலட் மேலுறைகளைச் சேகரித்து உலகப் புகழ் மிக்க கிரிக்கெட் வீரர்களின் பல்வேறு துடுப்பெடுத்தாடும் முறையிலான

"JUMBO" அளவுடைய போஸ்டர்களையும் ஸ்டிக்கர்களையும் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு.


- 10 EDNA மேலுறைகளுக்கு வர்ணJUMBO அளவுடைய போஸ்டர் ஒன்று
- 25 EDNA மேலுறைகளுக்கு வர்ண JUMBO அளவுடைய ஸ்டிக்கர் ஒன்று
- 100 EDNA மேலுறைகளுக்கு மென் பந்து மட்டை ஒன்று

30 – 05 – 2000 தினத்திற்குப் பிறகு காலாவதியாகும் 5 ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியுடைய சொக்கலட் மேலுறைக்கு மாத்திரமே செல்லுபடியாகும்.

**இன்றே நாடுங்கள்:**

**குறிஞ்சி பாமசி**
558, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
TEL-No. 021-3191
(சி/11157)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### அமரர் கிருஷ்ணன் சண்முகம்

(பனை. தெ. வ. அ. கூ. ச. ஊழியர், அச்சுவேலி)

பிறப்பு 07 – 04 – 1948 இறப்பு 26 – 01 – 2000

எமது குடும்பத் தலைவரின் மரணச்சடங்கில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தி அனுதாபங்கள் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள், சக பணியாளர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் நாளை (25 — 02 — 2000) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் குடும்ப சகிதம் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**மனைவி, பிள்ளைகள்.**

வீரபத்திரர் ஆலய வீதி,
கதிரிப்பாய்,
அச்சுவேலி.

(73931)

# புலிகளுடன் பேசாமல் தீர்வு கிட்டாது!

## அமைச்சர் திஸநாயக்கா

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் விடுதலைப் புலிகளே முக்கிய பங்காளிகளாக உள்ளனர். எனவே அவர்களுடன் உடனடியாகப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதன் மூலமே இந்த நாட்டில் நிரந்தரமான சமாதானத்தைக் கொண்டு வர முடியும்.

இவ்வாறு பி.பி.ஸியின் சிங்கள சேவையான 'சந்தேசிய வுக்கு' அளித்த பேட்டி ஒன்றில் விளையாட்டுத் துறை அமைச்சர் எஸ். பி. திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

நோர்வே அரசாங்கத்தின் உதவியுடன் அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த முன் வந்துள்ளது. விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தாமல் ஒருபோதும் இந்த நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்திவிட முடியாது என்று அப்பேட்டியில் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஐ-7)

## சிறைத் தண்டனை

மனைவிக்கு தாபரிப்புப் பணம் செலுத்தத் தவறிய கணவனை 5 மாத காலம் சிறையில் அடைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் நேற்று உத்தரவிட்டார்.

உடுப்பிட்டியைச் சேர்ந்த சதாசிவம் பாலகுருசாமி (வயது 40)என்பவருக்கு எதிராக, அவரது மனைவியான பா. செல்வராணி பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் தாபரிப்பு வழக்கு ஒன்றை தாக்கல் செய்திருந்தார்.

ஏற்கனவே நீதிமன்றம் உத்தரவிட்ட 7 ஆயிரத்து 800 ரூபாவை தாபரிப்புப் பணமாகச் செலுத்தத் தவறியமையாலே, அவருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (ஐ-109)

## மீளக்குடியமர்வின் பின்

# வலி.தென்மேற்கு செயலர்பிரிவில் 39பாடசாலைகள் இயங்குகின்றன

சண்டிலிப்பாய் வலி. தென்மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக் உட்பட்ட பகுதிகளில் உள்ள 41 பாடசாலைகளில் 39 பாடசாலைகள் மீளக்குடியமர்வின்பின் முழுமையாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆனால் இவற்றில் 20பாடசாலைகளுக்கு மேல் போதிய தளபாட மற்றும் உபகரண வசதிகள் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பாடசாலைகள் முற்றாகப் பாதிக்கப்படும் நிலையில் இருப்பதாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவு ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் கல்வி அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

இதேவேளை — பாதிக்கப்பட்ட பாடசாலைக்கு பிரமாண அடிப்படையிலான நிதி பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதி ஆகியவை ஊடாக மேலதிகமாக பணம் ஒதுக்கித் தருமாறு கோரப்பட்டுள்ளது. (இ-185)

# இலகுவில் தொழில்வாய்ப்புத் தரக் கூடிய பல புதிய கற்கைநெறிகள் சப்ரகமுவவில்

# யாழ். மாணவரை விண்ணப்பிக்க சிரேஷ்ட மாணவர் வேண்டுகோள்

யாழ்ப்பாண மாவட்ட மாணவர்கள் கடந்த காலங்களில் புதிய பல்கலைக்கழகங்களின் புதிய கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்கத் தயங்கினார்கள். இதற்குக் காரணம் அரசியல் பிரச்சினையும் கற்கை நெறி தொடர்பான போதிய தகவல்கள் குறைவாக இருந்தமையுமே ஆகும். இதனால் பல மாணவர்கள் தமது பல்கலைக்கழக அனுமதியை இழந்த துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளானார்கள். அத்துடன் தெரிவு செய்யப்பட்ட சில மாணவர்களும் இடம் தொடர்பான பீதியினால் பல்கலைக்கழக அனுமதியை ஏற்காது விட்டனர்.

ஆனால் தற்போது இந்த நிலை மாறியுள்ளது. கடந்த காலங்களில் சப்ரகமுவ பல்கலைக்கழக சிரேஷ்ட மாணவர்களால் கற்கைநெறிகள் குறித்து வழங்கப்பட்ட விளக்கங்களாலும், யாழ். மாவட்டத்தில் அவர்களால் நடத்தப் பெற்ற கூட்டங்களினாலும் அதிக மாணவர்கள் இப்புதிய கற்கை நெறிகளின் தாற்பரியத்தை உணர்ந்துள்ளார்கள். இதன் காரணமாக இப்பல்கலைக் கழகத்திற்கான யாழ். மாவட்ட மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இருந்த போதிலும், யாழ். மாவட்டத்தில் இருந்து வெளியிடங்களுக்கான தொடர்புகள் குறைவாக இருக்கின்ற காரணத்தால் எதிர்காலத்தில் இந்தப் பல்கலைக்கழகங்களுக்கு அதிகமான மாணவர்கள் அனுமதியைப் பெற அவர்களுக்கு போதிய விளக்கங்கள் கொடுக்க வேண்டியது சிரேஷ்ட மாணவர்களின் கடமையாகும். இது தொடர்பாக நாம் எடுத்த இந்த முயற்சி 1999 ஆம் ஆண்டில் உயர்தரப் பரீட்சை எடுத்த மாணவர்களுக்கு பெரும் நன்மை பயக்கும் என நினைக்கின்றோம்.

### அமைதியான பிரதேசம்

எமது பல்கலைக்கழகமானது சப்ரகமுவ மாகாணத்தில் உள்ள இரத்தினபுரி மாவட்டத்தில் அமைந்துள்ளது. ஆனால் இது பதுளை, நுவரெலியா எல்லைகளுக்கு அண்மையில் உள்ள பெலிகுல்லோயா எனும் மலைப் பிரதேசத்தில் உள்ளது. அதாவது கொழும்பு - பதுளை வீதியில் நூறாவது மைல் தூரத்தில் உள்ளது. மேலும் எந்தவிதப் அரசியல் சிக்கலோ பாதுகாப்புக் கெடுபிடிகளோ இல்லாத கற்றலுக்குரிய அமைதியான பிரதேசம் இது. அத்துடன் இப்பிரதேசங்களில் தமிழ் மக்கள் பெருமளவில் வாழ்கின்றனர்.

மேலும் இப்பல்கலைக்கழகம் அளவியல் விஞ்ஞானங்கள் (Surveying Sciences), விவசாய விஞ்ஞானங்கள் (Agriculture Sciences), பிரயோக விஞ்ஞானங்கள் (Applied Sciences), கலைகள் (Arts [R.S]), முகாமைத்துவம் (R.S.T), Management (R.S.T) ஆகிய கற்கை நெறிகளைக் கொண்டுள்ளது. இவற்றில் முகாமைத்துவமும், கலைப்பிரிவும் 3வருடங்களையும் மற்றவை 4வருடங்களையும் கொண்டுள்ளன. இங்கு 'Semester System' காணப்படுகின்றது. அதாவது ஆறு மாதத்துக்கு ஒருமுறை பரீட்சை நடைபெறும். பெரும்பாலும் Oxford பல்கலைக்கழக முறைகளே பின்பற்றப்படுகின்றன. இங்குள்ள ஒவ்வொரு கற்கைநெறியும் தொழில் முன்னிலைப்படுத்தப்பட்டு இருப்பதனால் வேலைவாய்ப்புச் சந்தர்ப்பங்கள் கூடுதலாக உள்ளது.

### பீடங்களைப் பற்றிய விளக்கம்

முகாமைத்துவ பீடம் (Faculty of Business Studies) (Management RST)

இந்தக் கற்கை நெறியில் முதலாம் வருடத்தில் முகாமைத்துவம் தொடர்பான சில பொதுவான பாட அலகுகள் கற்பிக்கப்படும். இரண்டாம் வருடத்தில் கீழ்வரும் பிரிவுகளுக்காக மாணவர்கள் பரீட்சைகளின் புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவார்கள்.

வணிக முகாமைத்துவம் (Business Management)

நிதி முகாமைத்துவம் (Financial Management)

சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் (Marketing Management)

சுற்றுலா முகாமைத்துவம் (Tourism Management)

இவற்றுக்கு கலைத்துறை, வர்த்தகத்துறை மாணவர்கள் விண்ணப்பிக்கலாம். ஒவ்வொரு பிரிவும் விரிவுரைகளுடன் சேர்ந்து பல பயிற்சித் திட்டங்களையும் கொண்டுள்ளது. இந்தக் கற்கைநெறிக்கு விஞ்ஞானமானி (B. Sc Degree) வழங்கப்படுகின்றது.

சமூக விஞ்ஞானங்களும் மொழிகளும் பீடம் (Faculty of Social Science and Languages) (கலைகள் [RS])

இந்தக் கற்கை நெறியில் சமூகவிஞ்ஞானத்தில் பொருளியல், சமூகவியல், அரசியல் கணனி விஞ்ஞானம், பத்திரிகைத் துறை என்பனவும் மொழிகளில் ஆங்கிலம், ஜப்பான், ஜேர்மன், தமிழ், சிங்களம் என்பனவும் அடங்குகின்றன. இப்பாடத்திட்டத்தில் முதல் ஆறு மாத காலம் பொதுவான அடிப்படை அறிவுரைகளும் (core course) அடுத்த ஆறு மாத காலம் பீடத்தில் உள்ள அடிப்படை கற்கை நெறியின் விளக்கங்களும் இடம்பெறும். இரண்டாவது வருடத்தில், பிரதான பாடங்கள், உப பாடங்கள் என இரு பாட அலகுகளை தெரிவு செய்யலாம். பாட அலகுகளுக்கு ஏற்ப பட்டங்கள் வழங்கப்படும். இந்தக் கற்கை நெறிக்கு கலை, வர்த்தகத்துறை மாணவர்கள் விண்ணப்பிக்கலாம். அத்துடன் இத்துறையில் மாணவர்கள் தரப்படுத்தலுக்கு உட்படாது இலங்கை முழுவதும் ஒரே வெட்டுப்புள்ளியில் தெரிவு செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

அளவியல் விஞ்ஞானங்கள்பீடம் (Faculty of Surveying Science)

இதற்கு கணிதத்துறை மாணவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம். 1995 ஆம் ஆண்டு உயர்தர பிரிவு தொடக்கம் பல்கலைக்கழக வெட்டுப்புள்ளி அடிப்படையில் இத்துறைக்கு மாணவர்கள் தெரிவு செய்யப்படுகின்றார்கள். மேலும் இக்கற்கை நெறியாக (Degree B. Sc [Special]) உள்ளது. இது நில அளவை சம்பந்தமான பாடங்களையும்தூயகணிதம், பௌதிகவியல், கணனியியல் ஆகிய பாடங்களையும் கொண்டுள்ளது. நவீன தொழில் நுட்பகணனி இலத்திரன் இயல்மயப்படுத்தப்பட்ட உபகரணங்களுடன் கூடிய செய்முறைகளை உள்ளடக்கி பாடத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. இத்துறை மட்டில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கூடிய வேலைவாய்ப்பை பெறக்கூடியதாகவுள்ளது. கணிதத்துறை மாணவர்களுக்கு பொறியியல் துறைக்கு அடுத்தபடியான சிறந்த கற்கை நெறியாகும்.

பிரயோக விஞ்ஞானங்கள் பீடம் (Faculty of Applied Sciences)

இப்பீடம் புத்தளத்தில் உள்ளது. இந்தக் கற்கைநெறிகளுக்கு கணிதத்துறை, உயிரியல் துறை மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும். இது பின்வரும் மூன்று பிரதான பாட அலகுகளை கொண்டது.

1. இயற்கை வளங்கள் (B Sc [Natural Resources])
2. உணவு விஞ்ஞானமும், தொழில் நுட்பமும் (B. Sc [Food Science and Technology)]
3. பௌதிக விஞ்ஞானம் (B.Sc [Physical Science])

இவையும் அதிக வேலை வாய்ப்புக்களை கொண்டுள்ளது.

விவசாய விஞ்ஞான பீடம் (Faculty of Agriculture Science)

இப்பீடம் பதுளை மாவட்டத்தில் உள்ளது. இந்தக் கற்கை நெறிகளுக்கு உயிரியல் பிரிவு மாணவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். இது மூன்று துறைகளைக் கொண்டது.

1. ஏற்றுமதி விவசாயம் (Department of Export Agriculture)
2. கால்நடை உற்பத்தி (Department of Livestock Production)
3. விவசாயமுகாமைத்துவம் (Department of Agriculture Business Msnagement)

இங்கு 4 வருடங்களில் 3 வருடம் பொதுவான விரிவுரைகள் நடைபெறும். இறுதி வருடம் பிரதான 3 அலகுகளில்விரும்பியஒருதுறையைத் தெரிவு செய்வதன் மூலம் அதன் விசேட (Special) பட்டத்தை [B. Sc (Special). பெறக்கூடியதாகவுள்ளது இந்தக் கற்கை நெறி பெருமளவில் செய்முறைகளைக் கொண்டது. மேலே குறிப்பிட்ட அலகுகள் இலங்கையில் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் மட்டுமே உள்ளது.

எனவே யாழ். மாணவர்கள் மேற்கூறப்பட்ட விளக்கங்களை அவதானித்து உங்கள் பல்கலைக்கழக விண்ணப்பங்களை விண்ணப்பிக்க வேண்டுகின்றோம். ★


# திருவள்ளுவர் விழாவும் பரிசளிப்பும்

இடம்: யா/ கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்

காலம்: 2000-02-24 வியாழக்கிழமை பிற்பகல் 1-00 மணி

தலைவர்: திருமிகு வி. மாணிக்கம் (வித்தியாலய முதல்வர்)

பேருரையும் பரிசில் வழங்கலும்:

★ பிரதம விருந்தினர்:-
பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ்
(பீடாதிபதி, பட்டப்பின் படிப்புகள் பீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

★ சிறப்பு விருந்தினர்:
திருமிகு. கு. கங்கைவேணியன்
(வேணி களஞ்சியம். யாழ்ப்பாணம்)

★ குறளமுதவுரை:-
மதுரகவி காரை. எம். பி. அருளானந்தன்
(திருக்குறள் போட்டி ஒழுங்கமைப்பாளர்)

★ தங்கப்பதக்கம் பெறுபவர்:-
செல்வி ஜெயமலர் பத்மநாதன்
(க.பொ.த. உயர்தர மாணவி — வித்தியாலயத்தில் 2000 ஆம் ஆண்டு தைத்திங்கள் முதல் நடத்தப்படுகின்ற 1330 திருக்குறள் மனனப் போட்டி, எழுத்துப் போட்டியில் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்)

குவலயத்தில் குறள்நெறி பரப்பி நிற்க வாழ்த்துவோர்

'விநாயகர் றேடேர்ஸ்'

இல. 1026, நாச்சிமார் கோயிலடி,
கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(739914)

# கோப்பாய் செயலர் பிரிவில் நஷ்டஈட்டுக் கொடுப்பனவு

வலி.கிழக்கு, பெப். 24

1,500 ரூபாவுக்கு மேற்பட்ட வருமானம் பெறுபவர்களுக்கான சேதமுற்ற வீட்டு நஷ்டஈட்டுக் கொடுப்பனவான ஒரு லட்சம் ரூபா கோப்பாய்ப் பிரதேசசெயலர் பிரிவில் 46 பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளது.

இவர்களுக்கான கொடுப்பனவுகள் வங்கிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும் உரியவர்கள் கிராம உத்தியோகத்தரிடமோ அல்லது பிரதேச செயலகத்திலோ தமது பெயரை உறுதிப்படுத்திய பின்னர் வங்கிகளில் பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(இ-180)


## கண்ணீர் அஞ்சலி

இலங்கை மின்சார சபையில்
எம்முடன் கடமையாற்றியவரான

**தம்பிஐயா சண்முகநாதன்**

அவர்கள் கொழும்பில் மரணமடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியுற்றோம். அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் கவலையையும் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

முருகேசு குடும்பத்தினர்
103, கனகரட்ணம் வீதி, அரியாலை.

கனகலிங்கம் குடும்பத்தினர்
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

(73922)



## கண்ணீர் அஞ்சலி

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை அலுவலர்
செல்வி ஐயாத்துரை மஞ்சுளா அவர்களின்
பாசமிகு அம்மம்மா
திருமதி

**சுப்பிரமணியம் தனலட்சுமி**

(இல. 26, செம்மணி ஒழுங்கை, அரியாலை, யாழ்ப்பாணம்)

அவர்களின் மறைவையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் பங்குபற்றி எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

செயலாளரும் உறுப்பினர்களும்
உத்தியோகத்தர்களும்.
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,
பளை.

(சி/11151)



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 15 — 02 — 1922



மறைவு 25 — 01 — 2000

அமரர் **சின்னத்தம்பி பொன்னையா**

திதி: 24-02-2000

அன்னாரின் மறைவைக் கேட்டு எங்கள் துயரில் பங்கு கொண்டு ஆறாத்துயரம் நீக்க ஆறுதல் கூறி மற்றும் அனைத்து வழிகளிலும் உதவியும், அஞ்சலி செலுத்திய அனைவருக்கும் நன்றி கூறுவதுடன் இன்று (24 - 02 - 2000) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
தகவல்: பொ. தங்கராசா (மகன்)
(மக்கள் வங்கி சுன்னாகம்)

உரும்பிராய் வடக்கு.
உரும்பிராய்.

(73897)


# தொழு நோய் சிகிச்சை

சண்டிலிப்பாய், பெப். 24

தொல்புரம் அரசினர் மத்திய மருந்துச்சாலையில் மாதத்தில் இரண்டாவதாக வரும் திங்கட்கிழமைகளில் முற்பகலில் தொழுநோயாளர்களுக்கான சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இப் பிரதேசத்தில் தொழுநோயினால் பாதிக்கப்பட்டவர்கள் குறிப்பிட்ட தினத்தில் இங்கு வந்து இதற்கான மருந்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-135)

# கருத்தரங்கு

கொழும்புத்துறை, பெப். 24

யாழ். ஆற்றல் மேம்பாட்டு ஒன்றியம் அதன் கண்டுக்குளியில் உள்ள பணிமனையில் பாடசாலையை விட்டு விலகியோருக்கான கருத்தரங்கு ஒன்றை தேசிய கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் அனுசரணையுடன் நடத்தவுள்ளது. (இ-30)

# வீதி சேதம்

கொக்குவில், பெப். 24

கலட்டிச் சந்தியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் செல்லும் பிறவுண் வீதியில் சுமார் 80 மீற்றர் தூரம் வரையான பகுதி குண்டும் குழியுமாகக் காணப்படுகிறது. (இ-69)

# நெடுந்தீவில் நாடக நிகழ்வு

நெடுந்தீவு மத்தி சென். ஜோன்ஸ் இயலிசை நாடக மன்றத்தின் சார்பில் மார்ச் 5 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை புனித யுவானியார் ஆலய தியோகு அரங்கில் ஞானசௌந்தரி நாடகம் நடைபெறும்.

எஸ். யேசுதாசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில் முதன்மை விருந்தினர்களாக பங்குத்தந்தை அருட்திரு. எல். மொன்வெட், நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் நா.இராமச்சந்திரன், பிரதேச சபைத்தலைவர் புலவர் அ.வெ.அரியநாயகம், பிரம்மஸ்ரீ கா. புவனேந்திர சர்மா, தென்னிந்திய திருச்சபை போதகர் வண. ஐ. எஸ். ஆனந்தராஜன், அருட்செல்வி எம். சிப்பிரியான், தீவகவலயக் கல்வி நிர்வாக உத்தியோகத்தர் எஸ். மெற்றாஸ் மயில், ஈ.பி.டி.பி. பொறுப்பாளர் எஸ். சிவராம் உட்பட பலர் கலந்து கொள்ளுவார்கள். (இ-111)

# 60 பேருக்கு நிரந்தர நியமனம்

யாழ். மாநகரசபையில் கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாகக் கடமையாற்றி வரும் ஊழியர்கள் 60 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுபற்றிய பொதுநிர்வாக அமைச்சின் புதிய சுற்றறிக்கை அண்மையில் அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாக மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாகப் பணிபுரிந்து வரும் இவர்களுக்கு சேவை முதிர்ச்சியின் அடிப்படையிலேயே நியமனம் வழங்கப்படவுள்ளது. (இ-10)

# சான்றிதழ்வழங்கும் வைபவம்

யாழ்ப்பாணம், பெப். 24

'யுனெஸ்கோ' நிகழ்ச்சித் திட்டத்தின் அனுசரணையுடன் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த ஆங்கில ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் இம்மாதம் 29 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

(இ-10-133)

## வலி. தென் மேற்கு செயலர் பிரிவில்

# சுகாதாரக் குறைபாடுகளை நீக்க ஒரு மாதகால அவகாசம்

வலி. தென்மேற்கு பிரதேச சபை எல்லைக்குள் இயங்கும் பாண் பேக்கறிகள், உணவகங்கள் மற்றும் தேநீர்ச்சாலைகள் என்பனவற்றிலுள்ள சுகாதாரக் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு அவற்றின் உரிமையாளர்களுக்கு ஒரு மாதகால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த கால அவகாசத்துக்குள் சுகாதாரத் திணைக்களத்தின் விதிகளின் படி நடந்து கொள்ளும் பாண்பேக்கறிகள், உணவகங்கள் மற்றும் தேநீர்ச் சாலைகளுக்கு இந்த வருடத்துக்கான உரிமம் வழங்கப்படுமென்று கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற கலந்துரையாடல் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச சபைத் தலைவர் வெ. அன்ரன் ஜோண்சன் தலைமையில் மானிப்பாயில் உள்ள பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொறுப்பதிகாரி எஸ். இராஜேந்திரா, ஆனைக்கோட்டை பொதுச் சுகாதார பரிசோதகர், மானிப்பாய் பொதுச் சுகாதார பரிசோதகர், பண்டத்தரிப்பு பொதுச் சுகாதார பரிசோதகர் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

பாண் பேக்கறிகள், உணவகங்கள், தேநீர்ச்சாலைகள் ஆகியவற்றில் சுகாதார விதிகள் எவ்வாறு பேணப்பட வேண்டும் என்று சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளால் அவற்றின் உரிமையாளர்களுக்கு இக் கூட்டத்தில் விவரமாக விளக்கிக் கூறப்பட்டது.

(இ-135)

# ஆலயத்திறப்புவிழா

புதிதாக நிர்மாணம் செய்யப்பட்ட சங்கானை புனித சவேரியார் தேவாலயம் நாளை மறுதினம் சனிக்கிழமை யாழ். ஆயர் அதிவந். தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையால் திறந்து வைக்கப்பட உள்ளது.

நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட சரித்திரப் பெருமை மிக்க, யாழ்.குடாநாட்டிலே உள்ளஒரேயொரு சவேரியார் தேவாலயம் இதுவாகும். இது மிகப் பழைமை வாய்ந்ததும், தனித்துவமானதும் ஆகும்.

(அ-29)

# விமானப் பயண அனுமதி வழங்கப்பட்டோர் விவரம்

யாழ்ப்பாணம், பெப். 24

யாழ். குடாநாட்டில் இருந்து வெளி இடங்களுக்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம் மாதம் 23 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

**சங்கானை**
(130718ஏ), (135927ஏ),

**சாவகச்சேரி**
(126061ஏ), (131288ஏ), (131288பி), (131288சி), (131293ஏ), (131297ஏ), (137383ஏ), (137383பி), (137403ஏ), (137403பி), (137406ஏ), (138414ஏ), (137415ஏ), (137416ஏ), (137423ஏ), (137490ஏ), (130525ஏ), (130525பி), (130548ஏ), (131445ஏ), (131445பி), (131445சி), (131445டி), (131447ஏ), (131447பி), (131455ஏ), (131479 ஏ), (131885 ஏ), (131885 பி), (131908 ஏ), (131908 பி), (131908 சி),

**யாழ்ப்பாணம்**
(128574 ஏ), (128574 பி), (130267 ஏ), (132095 ஏ), (132286 ஏ), (132286 பி), (132379 ஏ), (132 379 பி), (132424 ஏ), (136075 ஏ), (136921 ஏ), (136921 பி), (137029 ஏ), (137029 பி), (137032 ஏ), (137032 பி), (137056 ஏ), (137056 பி), (137075 ஏ), (137080 ஏ), (137086 ஏ), (137091 ஏ), (137091 பி),

**கரவெட்டி**
(135296 ஏ),

**மருதங்கேணி**
(0850109 ஏ), (0850109 பி)

**நல்லூர்**
(136109 ஏ), (136109 பி), (136109 சி), (128665 ஏ), (128665 பி), (128665 சி), (132063 ஏ), (132067 ஏ), (132067 பி), (132067 சி), (132329 ஏ), (132329 பி), (131854 ஏ), (135598 ஏ), (135598 பி), (135605 ஏ), (135705 ஏ), (835708 ஏ), (135708 பி), (135736 ஏ), (135736 பி), (135736 சி), (135807 ஏ)

**பளை**
(131893ஏ), (131893பி), (131898ஏ), (131900ஏ), (131901ஏ), (131902ஏ), (131902பி).

**பருத்தித்துறை**
(135115ஏ), (135259ஏ), (137581ஏ).

**சண்டிலிப்பாய்**
(131689ஏ), (135630ஏ), (135630பி).

**தெல்லிப்பழை**
(135646ஏ), (135646பி),

**உடுவில்**
(136305ஏ), (136306ஏ), (136311ஏ), (136311பி), (127125ஏ), (127125பி), (127438ஏ), (130831ஏ), (130821பி), (131707ஏ), (131707பி), (131707சி), (135566ஏ), (135679ஏ), (135679பி), (135781ஏ), (135953ஏ).

(க)


## கண்ணீர் அஞ்சலி

19 - 02 - 2000 அன்று சிவபதமடைந்த
எமது சக தோழர்கள்

யேபி, வாசு அவர்களின் அன்புத் தாயாராகிய

**முத்துக்குமார் சரோஜினிதேவி**

அவர்களின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

க. சண்முகராசா
''சண்முகம் களஞ்சியம்''
சங்கரத்தைச் சந்தி,
வட்டுக்கோட்டை.

(73924)

# மெய்வல்லுநர் போட்டிகள்

சாவகச்சேரி,பெப்.24

மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று வியாழன் பிற்பகல் 2.30மணிக்கு பாடசாலை அதிபர் நா.சிவசோதி தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் மு.வ.செல்வராசாவும் சிறப்பு விருந்தினராக கோட்டக் கல்வி அலுவலர் நா.சத்தியநாதனும் கலந்து கொள்வர். (இ-133-31)

* * *

வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்குப் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் கே.கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் கே.பாலகிருஷ்ணன், சிறப்பு விருந்தினர்களாக வேலணைக் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.தில்லைநாதன், வேலணை பிரதேசசபைத் தலைவர் ந.கருணாகரகுருமூர்த்தி, மற்றும் யாழ். பல்கலைக்கழக உடற் கல்வி போதனாசிரியர் எம்.இளம்பிறையன் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர். (இ-167)

* * *

மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளைமறுதினம் பிற்பகல் ஒரு மணிக்கு வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் அதிபர் வே.விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கோட்டக்கல்வி அதிகாரி நா.சத்தியநாதன் கலந்து கொள்வார். (க-133)

* * *

மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வளர்மதி விளையாட்டு மைதானத்தில் அதிபர் க.மயில்வாகனம் தலைமையில் நடைபெறும்.

மேற்படி நிகழ்வில் தென்மராட்சி கல்விவலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் செ.உதயகுமார் முதன்மை விருந்தினராக கலந்து கொள்வார். (க-133)

* * *

ஆவரங்கால் நடராஜஇராமலிங்கம் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் சு.முத்துக்குமாரசுவாமி தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ்.வலய நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.வரதராசாவும் சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரமும் கௌரவ விருந்தினராக சமாதான நீதிவான் சி.கிருஷ்ணபிள்ளையும் கலந்து கொள்வார் (க-69-7)

* * *

பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய வருடாந்த மெய்வல்லுநர் போட்டி வித்தியாலய அதிபர் கா.நடராசா தலைமையில் நாளைமறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக வலிமேற்கு பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதனும் சிறப்பு விருந்தினராக சங்கானைக் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.செல்லையாவும் கௌரவ விருந்தினராக பழைய மாணவரும் ஓய்வு பெற்ற அதிபருமான அ.சுப்பிரமணியமும் கலந்து கொள்வர். (க-28)

* * *

ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய அதிபர் ஏ.அருந்தவநேசன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கோப்பாய்க் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் ஆர். சிவஞானசுந்தரம் கலந்து கொள்வார் (க-69)

* * *

கச்சாய் அ.த.க. பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி இன்று பிற்பகல் 2.00 மணிக்கு வித்தியாலய ஐயா விளையாட்டரங்கில் அதிபர் க.மங்களேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்விவலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் இ.கணேசனும் சிறப்பு விருந்தினராக அ.கயிலாயபிள்ளையும (பளை கோட்டக்கல்வி அலுவலர்) கலந்து கொள்வார்கள். (இ-133)

* * *

ஸ்கந்தவரோதய கல்லூரியின் இல்லமெய்வல்லுநர் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் க.சிவாஜி தலைமையில் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பிரதம கணக்காளர் எம்.விஜயரகுநாதன் முதன்மை விருந்தினராகவும் இளைப்பாறிய ஆசிரியை திருமதி ரி.யோகேஸ்வரன், ஸ்கந்தா பழைய மாணவர் சங்க கனடாக்கிளையைச் சேர்ந்த ஏ.வடிவேல் ஆகியோர் விசேட விருந்தினர்களாகவும் உதவிக்கல்விப் பணிப்பாளர்கள் அ.தற்பரானந்தன் (உடுவில் கோட்டம்), வீ.பாலசிங்கம் (வலிகாமம் வலய உடற்க்ல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர்) ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். திருமதி குககுமாரி விஜயரகுநாதன் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசுகளை வழங்குவார். (இ-152-139)

## ஒத்திவைப்பு

சாவகச்சேரிக் கோட்ட ஆரம்ப கல்வி ஆங்கில ஆசிரியர்களுக்கு யாழ். ஆங்கில மூலவள நிலையத்தால் எதிர்வரும் 26 ஆம் திகதி நடத்தப்படவிருந்த கருத்தரங்கு மறுஅறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கருத்தரங்கு இடம்பெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என தென்மராட்சி வலயப் பணிப்பாளர் தெரிவித்தார்.

## நயினை அம்மன் கோயிலுக்கு தொலைபேசி

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயிலுக்குத் தொலைபேசி வசதி கடந்த 15ஆம் திகதி முதல் வழங்கப்பட்டுள்ளது.

வெளியூரில் உள்ள அடியார்கள் தமது நேர்த்திகள், பூசை, அபிஷேகங்கள் தொடர்பான விவரங்களை அறிந்துகொள்ள ஆலய தொலைபேசி இலக்கமான 070 - 213024 உடன் தொடர்பு கொள்ளுமாறு ஆலய பரிபாலனசபையினர் கேட்டுள்ளனர். (இ-3)

## ஊழியர்களை சேர்ப்பது நிறுத்தம்

கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தில் (ச.தொ.ச.) சமயா சமய அடிப்படையில் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்களை அமர்த்துவது கடந்த 14ஆம் திகதியிலிருந்து நிறுத்தப்பட்டுள்ளது.

ஏற்கனவே அந்த நிறுவனத்தில் சமயா சமய அடிப்படையில் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேவைக்கு அமர்த்தப்பட்டவர்கள் தொடர்பான விவரங்களையும், அந்த ஊழியர்களின் பிறப்புச் சான்றிதழ், கல்வித் தகைமைச் சான்றிதழ் மற்றும் கிராமசேவை அலுவலரிடமிருந்து பெற்ற நற்சாட்சிச் சான்றிதழையும் பெப்ரவரி 25ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்குமாறு கூ.மொ.வி. நிறுவனத்தின் பதில் மேலதிக பொதுமுகாமையாளர் (நிர்வாகம்) பி.பண்டித அந்த நிறுவனத்தின் அனைத்துப் பிரிவுகளின் பொறுப்பதிகாரிகளுக்கும் தெரிவித்துள்ளார். (ஐ)

## பயணிகள் விவரம் வெளியீடு

மட்டக்களப்பு,பெப்.24

காங்கேசன்துறைக்கும் - திருகோணமலைக்கும் இடையில் கடந்த ஆண்டு இடம்பெற்ற பயணிகள் கப்பல் சேவைகளில் பயணம் செய்தோரின் எண்ணிக்கை பற்றிய விவரங்களை அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அலுவலகம் வெளியிட்டுள்ளது.

இதன்படி காங்கேசன்துறையில் இருந்து 17ஆயிரம் பேர் திருகோணமலைக்கும், திருகோணமலையில் இருந்து 14ஆயிரம் பேர் காங்கேசன்துறைக்கும் பயணமாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7-21)

## செஞ்சிலுவைக் குழுவின் புதிய வதிவிடப் பிரதிநிதி

யாழ்ப்பாணம்,பெப்.24

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ். வதிவிடப்பிரதிநிதியாக றொப் டிராவன் பதவியேற்கவிருக்கின்றார்.

தற்சமயம் வதிவிடப்பிரதிநிதியாகப் பணிபுரியும் பியர் பேர்னாண் ஜெனீவாவுக்கு இடமாற்றம் செய் யப்பட்டதை அடுத்தே இவர் பதவி ஏற்கிறார். இவர் நாளை யாழ்ப்பாணம் வரவிருக்கின்றார்.

# கலாசார உத்தியோகத்தர்களுக்கு கடமைப்பட்டியல் இன்னும் இல்லை

யாழ். மாவட்டக் கல்வி வலயங்களில் கடந்த வருடம் கலாசார உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்ட பட்டதாரிகளுக்கு இதுவரை கடமைப்பட்டியல் வழங்கப்படவில்லை எனக் கலாசார உத்தியோகத்தர்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு மாகாணத்தில் உள்ள யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த கலாசார உத்தியோகத்தர்களுக்கு கடமைப்பட்டியல்களை வழங்கியுள்ளதோடு, பயிற்சிப்பாசறைகளையும் திருகோணமலையில் நடத்தியுள்ளது.

ஆனால் யாழ். மாவட்ட கலாசார உத்தியோகத்தர்களுக்கு இதுவரை கடமைப்பட்டியல்கள் வழங்கப்படவில்லை. பயிற்சிப் பாசறைகளும் நடத்தப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் சுமார் 15 கலாசார உத்தியோகத்தர்களுக்கு ஜனவரி, பெப்ரவரி மாதங்களுக்குரிய கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை. (ஐ-7)

# சனியன்று நடக்கும் பரீட்சைகள்

யாழ். வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலையில் அமைக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையங்களில் எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெறவுள்ள பரீட்சைகளின் விவரம் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. நடைபெறவுள்ள பரீட்சைகள் வருமாறு:-

* இலங்கை நீதிமன்ற எழுதுநர் சேவையில் இரண்டாம் தரத்தில் உறுதிப்படுத்துவதற்கு தகுதி பெறுவதற்கான பரீட்சை.

* அரசாங்க, மாகாண தட்டெழுத்தாளர் சேவையின் இரண்டாம் வகுப்பு 'அ' பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை.

* ஒருங்கிணைந்த அஞ்சல் சேவையில் 'பி' தரம் இரண்டில் உள்ள உத்தியோகத்தர்களுக்கான பொதுப் பொறுப்பு பரீட்சை.

* அரசாங்க, மாகாண அரசாங்க எழுதுநர் சேவையின் வகுப்பு இரண்டு 'அ' பிரிவிலுள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட மற்றைய சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத் திறமை காண் தடைப் பரீட்சை.

* அரசாங்க, மாகாண அரசாங்க சுருக்கெழுத்தாளர் சேவையின் தரம் இரண்டில் உத்தியோகத்தர்களுக்கான முதலாம், இரண்டாம் வினைத்திறமை காண் தடைப் பரீட்சை.

* அரசாங்க, மாகாண அரசாங்க சேவை கணக்குப் பதியுனர் சேவையின் இரண்டாம் வகுப்பின் 'அ' பிரிவிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத் திறமை காண் தடைப் பரீட்சை.

* கிராம அலுவலர் சேவையின் இரண்டாம் தரத்திற்கான அலுவலர்களை முதலாம் தரத்திற்கு பதவி உயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சை.

பரீட்சைக்கு தோற்றுபவர்களுக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)


**JAFFNA SCIENCE ASSOCIATION SECTION - D**

Seminar Series - 05

**Venue : Geography Lecture Hall**
University of Jaffna.

Date : 25.02.2000
Time : 2.30 p.m.
President : Prof. K.Sinnathamby
Head/Dept. of Education
University of Jaffna.

**Topic:** *Teaching Approaches in English During British Period in Jaffna and its Implications for the Present.*

Presented by : **Mrs.Shanthi Vignarajah**
Head/ELTC
University of Jaffna.

**All Are Cordially Invited**

V.P.Sivanathan.
Secretary - D

(C/11160)

**மாபெரும் அரங்கேற்றம்**

யாழ்.பல்கலைக்கழக
முல்லை மாவட்ட மாணவர் ஒன்றியம் வழங்கும

*அடங்காப்பற்று*
(பண்டார வன்னியன் நாட்டுக்கூத்து)

இடம் :- வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி
காலம் :- 24.02.2000 வியாழக்கிழமை மாலை 3.00 மணி

சந்தர்ப்பத்தினைத் தவறவிடாதீர்கள்!
கலை ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் (73942)

**கண்ணீர் அஞ்சலி**

யாழ்.மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் (கணக்காய்வு)
**திருமதி கோமளா திருநாவுக்கரசு**
அவர்களின் பாசமிகு மகன்
**திருநாவுக்கரசு சுதர்சன்**

அவர்களின் திடீர் மறைவுச் செய்திகேட்டு வேதனையடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மாசாந்தியடைய இறைவனை இறைஞ்சுகிறோம்.

நிர்வாகத்தினர்,
கணக்காய்வாளர்,
யாழ்.மாவட்ட கணக்காய்வாளர் சங்கம்.
(C/11159)

*குளிர்மையின் மறுபெயர்!*

**NIPPON**

இலங்கையில் அதிகூடிய தெரிவு 30ற்கும் மேற்பட்ட மாதிரிகள்!

**மின்விசிறிகள்**

- TABLE FANS
- CEILING FANS
- STAND FANS
- BOX FANS
- EXHAUST FANS
- WALL FANS
- ORBIT FANS
- AIR COOLING FANS, ETC.ETC

LANKA NIPPON
'தரத்தின் சின்னம்'

No.18,Keyzser Street, Colombo - 11
T.P:- 437735 Fax:-437736
No.10, Trelawny Place (Behind Milk Bar)
Bambalapitiya Junc., Colombo- 04 Tel: 589992.

(சி-10982)

# இன்ரநெற்றில் யாழ். இந்து

இன்ரநெற் இணையத்தில் யாழ். இந்துக் கல்லூரி தகவல் தளம் செயற்படத் தொடங்கி ஓராண்டு பூர்த்தியாகின்றது.

இலங்கையில் உள்ள கல்லூரிகளில் முதன்முதலில் இன்ரநெற்றில் தனித் தளத்தை அமைத்து, அத் தளத்தினை முதனிலை இராஜ்ஜியத்தில் முதலில் பதிவு செய்தது யாழ். இந்துக் கல்லூரியே என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளை இந்த தகவல் தளத்தை அமைத்துள்ளது. இத்தளம் ஊடாக கல்லூரி மற்றும் பழைய மாணவர்கள் பற்றிய தகவல்களை உடனுக்குடன் பரிமாறிக்கொள்ள முடியும். உலகின் எந்தப்பாகத்தில் இருந்தும் கல்லூரியுடனும் அதிபருடனும் தொடர்புகொள்ள விரும்புவோர் admin@jhc.lk என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் தொடர்பு கொள்ள முடியும். (உ)

## காயமடைந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருவரான மைக்கல் அன்ரனி பெர்னாண்டோ (வயது 30), மாடசாமி சுப்பிரமணியம் (வயது 28) ஆகிய இருவரும் காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் மாடசாமி சுப்பிரமணியம் தவிர்ந்த ஏனைய மூவரும் உறவினர்கள் என்று கூறப்பட்டது.

கடந்த ஞாயிறு இரவு தொழிலுக்கு எனப் புறப்பட்ட இவர்களின் படகு திசைமாறி இந்தியக் கடல் எல்லையைத் தாண்டி இலங்கை கடற்பிராந்தியத்தினுள் நுழைந்த சமயம் கடற்படையினரின் தாக்குதலுக்கு இலக்கானதாக தெரிகின்றது.

## உண்ணாவிரதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தென்பகுதியில் உள்ள செய்தி ஊடகங்களும், அரசுத் தரப்பும் விடுதலைப் புலிகள் சம்பந்தமான பொய்யான -உண்மைக்கு மாறான - செய்திகளையும் தகவல்களையும் சிங்கள மக்களுக்கு வழங்கி வந்தன.

ஆனால் விடுதலைப் புலிகள் எமது பிள்ளைகளை அன்புடன் அரவணைத்து பராமரித்துள்ளனர். இதனைப் பார்க்கும்போது புலிகள் எவ்வளவு மென்மையானவர்கள், அன்பான மனித உள்ளம் கொண்டவர்கள் என்பது துல்லியமாகத் தெரிகின்றது. தென்னிலங்கையில் அப்பாவி மக்கள்படும் வேதனைகளை நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கின்றோம். ஆனால் யுத்தக் கைதிகளாகிய எமது உறவினர்களை விடுதலைப் புலிகள் பண்பாகவும், அன்பாகவும், கருத்துடனும் பராமரித்து வருவதைப் பார்த்து நாம் வியப்படைகின்றோம் - என்று அவர்கள் மேலும் கூறினர். (உ-6-க)

## விபத்தில் இளைஞர் பலி

தெல்லிப்பழை துர்க்கா அம்மன் ஆலயத்துக்கு அருகில் நேற்று இடம்பெற்ற லொறி - மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த சுன்னாகத்தைச் சேர்ந்த ஜெயச்சந்திரன் பிரதீபன் (வயது 16) என்பவர் உயிரிழந்தார் (உ-86-139)

## அரசு - புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாது என்பதை இரு தரப்பினரும் அறிந்துள்ளனர்.

சமாதான யோசனைகள் தொடர்பாக பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் கட்சிகளுடனும் தமிழ்க் கட்சிகளுடனும் பேச்சு நடத்தப்பட்டுள்ளன.

விடுதலைப்புலிகளிடம் அரசமைப்புத் திருத்த யோசனைகளை சமர்ப்பிக்க முன்னர் பொதுவான கருத்தொருமை காண்பதற்காகவே ஐ.தே.கவுடன் பேசுவதற்கு அரசு காத்துக் கொண்டிருக்கிறது.

இந்த யோசனைகளை அரசு இப்போதே விடுதலைப் புலிகளிடம் தெரிவிக்கமுடியும். எனினும் இந்தத் திட்டத்தை அமுல் செய்வதில் சிக்கல்கள் இருக்கக்கூடாது. இதனை உறுதிப்படுத்துவதற்காகவே ஐ.தே.கவுடன் கருத்தொருமைகாண அரசு முனைகிறது.

பேச்சுவார்த்தை முயற்சிகள் சுலபமானதாக துரிதமானதாக அமையப் போவதில்லை. இதற்கான முயற்சிகள் பெறுமதிமிக்கவை.

இதற்கு மாற்றாக உள்ள வழி உயிரிழப்பையும், சேதங்களையும் கொண்டுவரும் - இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (உ-க-3)

## இளைஞன் கைது

ஊரெழு கிழக்கு, சிவன் வீதி பகுதியைச் சேர்ந்த சின்னத்துரை விஜயருபன் (வயது21) என்ற இளைஞன் கடந்த 22 ஆம் திகதி வீதியால் சென்று கொண்டிருந்தபோது ஊரெழு முகாம் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-5-9)

## பயணிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயத்தில் இந்தக் கட்டுப்பாடு தளர்த்தப்படும்.

ஒரு சமயத்தில் முந்நூறு பயணிகள் இக்கப்பலில் பயணம் செய்யக் கூடியதாக இருக்கும். அவசரத் தேவைகளுக்காகச் செல்வோர் மற்றும் அரச அதிகாரிகளுக்காகப் பதினைந்து முன்னுரிமை ஆசனங்கள் 'ரிசேவ்' செய்து வைக்கப்படும்.

இக்கப்பல் சேவைக்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வழித்துணைப் பாதுகாப்பு பெற்றுக் கொடுப்பதற்கு முன் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் -

எனினும் அது குறித்து இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என்றும் -

நேற்றைய மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்ட பெண்டி தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் கப்பல் கூட்டுத்தாபனம், அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் அலுவலகம், கடற்படை, இராணுவம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் யாழ். அரச அதிபர் க.சண்முகநாதனும் அவரது உதவியாளர்களும் கலந்து கொண்டதாகத் தெரியவந்தது.

இக்கப்பலில் ஒரு வழிப்பயணத்துக்கு இரண்டாயிரம் ரூபா கட்டணம் அறவிடப்படவேண்டும் என்று கப்பல் கூட்டுத்தாபனப் பிரதிநிதிகள் தெரிவித்தபோது அதனை யாழ்.செயலகப் பிரதிநிதிகள் கடுமையாக ஆட்சேபித்ததாகவும் அறியவந்தது.

ஐந்நூறு ரூபாவுக்கு மேல் இக் கட்டணம் அதிகரிக்கப்படக்கூடாது என்று செயலகப் பிரதிநிதிகள் தெரிவித்தனராம்.

கப்பல் செலவுகள் குறித்து மீண்டும் மதிப்பீடு செய்து கட்டணம் பற்றிய புதியமுடிவை அடுத்துவரும் நாள்களில் அறிவிப்பது என்றும் - நேற்றைய மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. (உ-3-7)


**தரிசனம் இலங்கை - 2000**

**இன்னிசை நற்செய்திக் கூட்டம்!**

**சுகமளிக்கும் ஆராதனை!!**

இன்னிசைக் குயில் ~ சகோதரி எஸ்தர் பேபி
('சின்னஞ்சிட்டுக் குருவியே' புகழ்)
சுவிசேஷ இடிமுழக்கம் ~ சங்கை ஜெயச்சந்திரன்
அன்பின் அப்போஸ்தல தூதுவன் ~
சங்கை டாஸன் சாம்சன்
மற்றும் பலர்
'வியாதியஸ்தலர்களுக்கான விசேட ஜெபங்கள்'

இடம் - நல்லூர் இளங்கலைஞர் மன்றம்,
சட்டநாதர்கோவில் வீதி, நல்லூர்.
காலம் - 24ஆம் திகதி
இன்று வியாழக்கிழமை
மாலை 3.00மணி

**யாவும் இலவசம்! யாவரும் வருக!!**

இனியும் தாமதிக்காதீர்கள்!
இரக்கத்தினால் கிடைக்கும் இறுதி நாள்கள்!!
ஆசிர்வாதம் பெற திரண்டு வாருங்கள்!!!

"நானே உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்"
- இயேசு கிறிஸ்து
(யோவான் 9:5)

இறுதி நாளான இன்று காலை 9.00 மணிக்கு முழுநேர ஊழியர்களுக்கும் முன்னேறும் விசுவாசிகளுக்குமான கருத்தரங்கும் நடைபெறும்.

கானான் ஜெபஆலயம்
இருபாலை.

(C/11121)



நேந்தைய வீடியோ
C.D வெளியீடு
பிரபு, கார்த்திக்
நடித்த
※ தை பொறந்தாச்சு
கமலஹாசன்
நடித்த
※ ஹேராம்
(திரை அரங்குக்கு மட்டும்)
**விஷ்ணு வீடியோ**
கே.கே.எஸ். வீதி,
கோண்டாவில்.
(73944)



**எமது புதிய ஓடியோ C.D. வெளியீடு**

★ காதல் குயில்கள்
★ தலைவி
★ ரோசாப்பூ சின்ன ரோசாப்பூ
★ தை பொறந்தாச்சு
★ ஊர்வசி
★ சத்தம்
★ சந்தித்த வேளை

அடுத்த வெளியீடு
A.R ரகுமானின்
அலைபாயுதே.
**வீடியோ எக்கனமி**
மியூசிக் கோணர்
பரமேஸ்வராசந்தி.
(73945)



**கணக்கீடு**
**D.SAM**
பிரத்தியேக வகுப்பு
(76/2, கோயில் வீதி
யாழ்ப்பாணம்)
**A/L 2000**
**முகாமைக்கணக்கீடு**
ஆரம்பம்
26-02-2000 சனி
மாலை 5 மணி (ப.நே)
(C/11124)



**JAFFNA TECHNICAL INSTITUTE**
**JAFFNA, SRILANKA.**
T.P.NO:-3335
**COMPUTER COURSES**

Diploma courses
* Diploma in microsoft office 2000
* Diploma in windows Applications
* Diploma in computer programming
* Technician diploma in computer Hardware
* Diploma in software Engineering.

Certificate courses
Ms Excel 2000, Ms Word 2000, Ms Access, Ms Power point 2000, Pascal, Coreldraw, Page maker, D Baseiii+ and Visual Basic 6.

Childrens Programmes (14-19 years)

**கடந்த 20 வருடங்களாக பல்வேறு துறைகளில் பயிற்சி அளித்து வரும் நிறுவனம்:-**

* கூடிய நேர செய்முறைப் பயிற்சி அளிக்கப்படும்.
* கட்டணத்தினை தவணை முறையில் செலுத்தும் வசதி.
* தொழில் புரிவோருக்கான சனி, ஞாயிறு வகுப்புகள்.

புதிய பயிற்சி ஆரம்பம் (1) 26-02-2000 (9.00 A.M)
(2) 28-02-2000 (3.00 P.M)

- DIRECTOR

J.T.I
No.7, Palaly Road
Jaffna.
(73908)



**தாதிய உத்தியோகத்தர் தேவை**

நகரின் மத்தியில் 24 மணிநேரமும் இயங்கும் தனியார் வைத்தியசாலைக்கு தாதிய உத்தியோகத்தர்கள் தேவை.

தகுதியானவர்கள் விண்ணப்பத்துடன் 25.02.2000 அன்று பிற்பகல் 3 மணியளவில் நேரில் சமுகம் கொடுக்கவும்.

தகுதியின் அடிப்படையில் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும்.

– நிர்வாகி

யாழ் வைத்திய நிலையம்
166, 1ஆம் குறுக்குத் தெரு, வேம்படி,
யாழ்ப்பாணம்.
(73940)


## மரண அறிவித்தல்

### கனகலிங்கம் சுந்தரலிங்கம்

(முன்னாள் விரிவுரையாளர், ஜேர்மன் தொழில்நுட்பக்கல்லூரி, மொரட்டுவ)

நல்லூரைப் பிறப்பிடமாகவும், இல.4, சோமகிரிபிளேஸ், வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட கனகலிங்கம் சுந்தரலிங்கம் நேற்று (23.02.2000) புதன்கிழமை கொழும்பில் இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகலிங்கம் - ஞானசவுந்தரி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் பமிலாதேவியின் அன்புக் கணவரும் யோகசண்டிகா, ஞானநிவேதிதா, பக்தரிஷிகேசன், சீரடிதயாளந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும் முத்தானந்த சரஸ்வதி (திவ்விய ஜீவன சங்கம்) அவர்களின் பெறாமகனும் ஞானலிங்கம் (A.G.M., இலங்கை மின்சார சபை, கொழும்பு), கனகசவுந்தரி, லிங்கா (சட்டத்தரணி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சண்முகரட்ணம் (முன்னாள் பொறியியலாளர், இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம்), துரைராஜா, புவனேஸ்வரி (ஆசிரியை, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (24.02.2000) வியாழக்கிழமை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுப் பின்னர் இறுதிக் கிரியைகளுக்காக பிற்பகல் 4.00 மணிக்கு ஜாவத்த மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு.துரைராஜா
(மைத்துனர்)

19, பண்டாரக்குளம் வீதி,
நல்லூர்.
(C/11165)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24-02-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.